# மோதுகை மாற்றுநிலையாக்கம், நியாயமான சமாதானம் ஆகியனவற்றை நோக்கி

கெவின் கிளமென்ட்ஸ்



1. முகவுரை 548

2. நிலைபேறுள்ள சமாதானம் 549
அரசியல் நிலைப்படுவனவற்றின் மையப்பாடும், முதன்மையும் 550
நிஜசெய்நிலை அரசியல் குறித்த விமர்சனம் 551
வன்செயலுக்கான அரசியல் மூலங்கள் 552
அரசியலை நிறைகுற்றமயப்படுத்தல் 553
பிராந்திய அரசியல் தாக்கங்கள் 554
உந்துசக்தியாக பொருளியல் கோட்பாடு 556
நீண்டகால மோதுகை இயக்கவியல் 559

3. சமாதானத்தைக் கட்டியெழுப்பி வன்மை நிறைந்த மோதுகைகளை மாற்றுநிலையாக்கலிலும் நீதியான சமாதானத்தை ஊக்குவிப்பதிலும் பெறும் வகிபாகம் 560

4. கற்றுக்கொண்ட படிப்பினைகள் 567

5. உசாத்துணையும், மேலதிக வாசிப்பும் 570

# மோதுகை மாற்றுநிலையாக்கம், நியாயமான சமாதானம் ஆகியனவற்றை நோக்கி

கெவின் கிளமென்ற்ஸ்

## 1. முகவுரை

அநேகமான செயல்முறைக்கொவ்வா, சமயம் சார்ந்த தொலை நோக்கிற்கு மையமாகத் திகழ்பவை சமாதானம், நீதி, உண்மை, காருண்யம் ஆகியவையே. உதாரணமாக சொர்க்கம், நிர்வாணம் என்ற இரு கருதுகோள்களும் நீதி, அமைதி, அகிம்சை, இணைவு ஆகியவற்றையே பொருளாகக் கொண்டுள்ளன. இப் பேரார்வங்கள் அநேகமான சமுதாயங்களிலும், கலாசாரங்களிலுமுள்ள அநேகமான மக்கள் ஒழுங்கு, குழப்பம், சமாதானம், யுத்தம், அமைதி, அமைதியின்மை, கட்டமைப்பு ஸ்திரப்பாடு, ஸ்திரமின்மை, சமநிலை, சமநிலையின்மை, அகவிணைப்பு, நீக்குதல், நீதி, அநீதி, பொறுமை, பொறுமையின்மை அல்லது செல்வாக்கு, வறுமை, என்பவற்றினுள் தெரிவுகளை மேற்கொள்ளவேண்டி வரும் சந்தர்ப்பங்களில் இயன்றபோதெல்லாம் பின்னையதைவிட முன்னையதையே தெரிவுசெய்வர். இதனை நியாயப்படுத்துவதற்கான நல்ல ஒரு காரணமும் உண்டு. உதாரணமாக ஸ்ரீன் ஜே மோல்ட் (2001) என்பவர் கூறுவது என்னவெனில்:

> *ஆயிரத்துக்கு ஒன்று என்ற வகையில் நல்ல, இரக்க சிந்தையுள்ள மக்கள் மற்ற அனைவரையும் விஞ்சிவிடுவர். மனித வரலாற்றின் துயரம் உயர்ந்த அளவில் காணப்படும் தீய மக்களிலன்றி அரிதான தீய செயல்களினால் ஏற்படுத்தப்படும் அழிவிலேயே தங்கியுள்ளது. சிக்கலான முறைமைகளை படிப்படியாகவேகட்டியெழுப்பமுடியும். ஆயினும் அழிவை ஒரு நொடியிலேயே ஏற்படுத்தலாம். எனவே மிகப்பெரும் சமமின்மை என நான் குறிப்பிட விரும்புவதில் ஒவ்வொரு குறிப்பிடத்தக்க தீய சம்பவமும் 10,000 இரக்கமான செயல்களால் பெரும் எண்ணிக்கையானவர்களின் கவனிக்கப்படாத கண்ணுக்குப் புலப்படாத "சாதாரண" முயற்சிகளால் சமப்படுத்தப்படுகின்றன.*



எனவே சிக்கலான விடயம் என்னவெனில், இந்த வழமையான இரக்கச் செயல்கள், பொதுநலப்பண்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, நீதி, மரியாதை ஆகியவற்றை நீதி, சமாதானம், மோதுகைக் கூருணர்வுள்ள அபிவிருத்தி ஆகியவற்றுக்கான வன்மையான அரசியல் கடப்பாடுகளாக எவ்வாறு மாற்றலாம் என்பதை உறுதி செய்து கொள்வதே ஆகும். சர்வதேசரீதியான இந்த தூண்டுதல்களை அரசியல் நடைமுறையில் உணர்ந்து கொள்வது ஏன் கடினமாகத் தோன்றுகின்றது? வன்மையான மோதுகைகளில் நியாயமான சர்வதேச இடைத்தொடர்புகள் சுட்டிக்காட்டும் போதுமான ஒழுங்குமுறையில் நிகழும் சில காரணிகளும், தனித்தன்மை வாய்ந்த பிற காரணிகளும் (உதாரணமாக குறிப்பிட்ட தூண்டுதல்கள் அல்லது குழு வேறுபாடுகளையும் வன்மையான முடிவுகளில் அதிருப்தியினையும் நிலைப்படுத்தும் உள்;ர் வழிகள்) உண்டு. கலாசார நுணுக்கங்களுக்கு கூருணர்வுடனிருக்கும் அதே வேளை சாத்தியமான அல்லது உண்மையிலிருக்கும் மோதுகைச் சூழ்நிலைகளை அடையாளங்காண்பதே கருத்தியல் தொடர்பான சவாலாகும்.

இந்த வெவ்வேறு இயக்க ஆற்றல்களின் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் இயல்பினை ஏற்றுக்கொண்டுள்ள நவீஜர், ஸ்டுவர்ட், வேரினன் (2000 தொகுதி 2,2) " War, Hunger and Displacement" என்பதில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

*(சிக்கலான, மனிதாபிமான அவசரத் தேவைகளில் (CHE) பொருளாதார, அரசியல், கலாசார மூலகங்கள் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன. பொருளாதாரத் தேக்கம் அல்லது வீழ்ச்சி குறிப்பாக குழுக்களிடையேயும் (கிடையான சமமின்மை), தனிப்பட்டவர்களிடையேயும் (செங்குத்து சமமின்மை) பெரும் வேறுபாடுகளுடன் இணைந்து, தமது அதிகாரப் போராட்டத்துக்கு மக்களின் ஆதரவைத் திரட்ட தலைவர்கள் பயன்படுத்தும் அரசியல் அதிருப்தியைத்தூண்டி, இவ்வாறாக உணரப்பட்ட கலாசார வேறுபாடுகளைத் தீவிரமாக்கி, பிறரைச் சுரண்டுவதற்கும் பயன்படுத்துகின்றன. இன, சாதி, மத, குல அல்லது வகுப்பு அடிப்படையிலான வேறுபாடுகள் மோதுகைகளினால் வலியுறுத்தப்படுகின்றன, அத்துடன் சில சமயங்களில் உருவாக்கப்படுகின்றன. இவை பிரதான காரணங்களாக இல்லாவிடினும், அவை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளைக் கடினமாக்கும் சுயாதீன ஆற்றலைப் பெறுகின்றன. மேலும், யுத்தத்தில் தனிப்பட்ட தீர்மானங்களின் விளைவே கூட்டு நடவடிக்கையாகும். தனிப்பட்டவர்களின் அரசியல், பொருளாதார நோக்கங்கள் யுத்தத்தினால் நிறைவேற்றப்படக்கூடும். அத்தகைய தூண்டுதல்கள் தூபமிட்டு மோதுகைகளை உருவாக்கவும் கூடும்.*

அத்தகைய பரிமாணங்களை புறக்கணித்து இடையீட்டு முறைவழிகள் மூலம் உதாரணமாக சிவில் சமூகத் திறனை மேம்படுத்தல், மனப்பாங்குகளில் மாற்றம், தொடர்புகள், நம்பிக்கையை கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது சமுதாய மட்டத்தில் பயனுள்ளதாகவிருக்கும். ஆயின் இவை கட்டமைப்பிலான அல்லது நேரடி வன்முறைகளின் அடிப்படையில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமில்லை. மாறாக இந்த சமுதாய அடிப்படையிலான முறைவழிகள், தீங்குவிளைவிப்பனவாக இருக்கும்போது சமாதான உறவுகள் உள்ளனவென்னும் தவறான உணர்வை ஏற்படுத்தலாம்.



ஆகவேஇவ்வத்தியாயம் இரு செயல்களைப் புரிவதற்கு முயல்கின்றது முதலாவதாக ஒழுங்கமைக்கப்பட்ட வன்செயல்களின் பொருளாதார, அரசியல் சமூக மூலங்களையும் ஒழுங்குசெய்யப்பட்ட வன்செயல்களின் இயக்க ஆற்றல் சிலவற்றையும் புரிந்துகொள்வதும், இரண்டாவதாக உத்தியோகபூர்வ, உத்தியோக பூர்வமற்ற மட்டத்தில் வன்மையாக மோதுகைகளுடன் தொடர்புற்ற வேறுபட்ட செயற்பாட்டாளர்களின் மனப்பாங்கையும் நடத்தையையும் மாற்றுவதற்கு மோதுகை ஆய்வும்,மோதுகைத் தீர்வு நடைமுறைகளும் எவ்வாறு உதவக் கூடும் என்பதை ஆய்வுசெய்வதுமாகும்.

அது நிலையான சமாதானத்துக்கான கட்டமைப்பு மாற்றுநிலையாக்கத்தின் மையநிலையையும், நவீன மோதுகைகளுக்குப் பின்னணியில் இருக்கும் அடிப்படையான அரசியல் பொருளாதார இயக்க ஆற்றல்கள் சிலவற்றின் ஆய்வினையும் ஏற்றுக்கொள்வதுடன் ஆரம்பமாகும். அது பின்னர் மோதுகைத்தீர்வு செயற்பாட்டாளர்கள் ஆராயப்படும் மோதுகைகளின் அரசியல் பொருளாதாரம் மோதுகை இடையீட்டு முறைவழிகளின் வடிவமைப்பு, செயற்படுத்தல் தொடர்பாக ஏன் எவ்வாறு கவனம்செலுத்த வேண்டும் என்பதைப் பரிசீலிக்கின்றது.

## 2. நிலைபேறுள்ள சமாதானம்

காலம் பூராவும் அகிம்சையான கூட்டுறவு தொடர்புகள் நீடித்திருப்பது எனப் பொருள்படும் நிலையான சமாதானம் தற்போது நிலவும் பதற்றங்கள், மோதுகைகள், தகராறுகள், வன்செயல்களின் வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றுக்கு வெறுமனே கவனம் செலுத்துவதால் பெறப்படமாட்டாது. மோதுகைகளின் அடிப்படை கட்டமைப்பு மூலகங்கள்பற்றி மிக ஆழமாக, பங்கிடப்பட்ட ஆய்வு (இடையீட்டாளர்கள், இடையீடு செய்யப்பட்டவர்கள், மோதுகைகள் தொடர்பான சட்டபூர்வமான அக்கறை உள்ளவர்கள் ஆகியோருக்கிடையே) இருக்கவேண்டிய தேவை உள்ளது. தேசிய அரச முறைமை குடிமக்களின்

பாதுகாப்பின்மைக்கும், மனிதாபிமான சிக்கல்களுக்கும் பிரதான மூலங்களாக இருக்கும்போது பிராந்திய, உலகளாவிய அமைப்புக்களை இவ்வாய்வில் கூட்டிணைப்பது முக்கியமானது.

இவ்வாய்வானது உதவி அல்லது இடையீட்டு நடவடிக்கைகளை வடிவமைக்க அல்லது அபிவிருத்தி செய்வதற்குமுன் நடாத்தப்படவேண்டும். அது நிலையான சமாதான தொடர்புகளைப் பெறுவதற்குத் தடையாக உள்ள அடிப்படைப்பிரச்சினைகள் அவற்றின் ஆரம்ப வரலாறுபற்றிய விழிப்புணர்வு, நிறுவன முறையான குறிக்கீடுகள், தடைகள் அல்லது குறைபாடுகள்தொடர்பாக கூடிய கவனம்செலுத்தவேண்டும். தொடர்ந்தும் எந்த இடையீட்டின் வெற்றிக்கும் பிரதானமாக இருக்கும் இந்த ஆரம்ப ஆய்வானது பிரச்சினைகளுக்கு அடிப்படையான மூலகாரணங்களுக்கு முகம் கொடுக்கும்பொருட்டு நடவடிக்கை இடையீடு செய்யாதிருத்தல் அல்லது முறைசாரா, கூடுதலாக அரசியல் தொடர்புடையதாகத் தோற்றும் இடையீடுகளின் அபிவிருத்தியில் அல்லது தீர்மானங்களில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவோரும், மோதுகைத் தீர்வுகளில் ஈடுபட்டுள்ள பிறரும் ஈடுபடும் விளைவை ஏற்படுத்தும்.

## 2.1 அரசியல் நிலைப்படுவனவற்றின் மையப்பாடும், முதன்மையும்

ஒழுங்கையும், பயனுறுதிமிக்க பங்கேற்பினையும் உருவாக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், பொறிமுறைகள் செயல்முறைகள் ஆகியவற்றுக்கு கவனம்செலுத்தாமல் கட்டமைக்கப்பட்ட வன்செயல்கள், சமூக பொருளாதார அநீதிகள் போன்ற ஆழமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது மிகவும் கடினம். உதாரணமாக கலெவி ஹொல்ஸ்ற்றி (1996, 20-21) வலியுறுத்துவது என்னவெனில்:

> *பிந்திய இருபதாம் நூற்றாண்டு யுத்தங்கள் வெளிநாட்டுக்கொள்கை, பாதுகாப்பு, கௌரவம் அல்லது அந்தஸ்து தொடர்பானவை அல்ல. அவை அரசாண்மை, ஆளுமை தொடர்பானவை, நாடுகளினதும் அரசிலுள்ள சமூகங்களினதும் அந்தஸ்து தொடர்பானவையுமாகும்.*



உலகின் யுத்த வலயங்களிலிருந்து மேலும் மேலும் பல சான்றுகள் உள்ளன. உதாரணமாக, இறைமையுடைய அரசுகள், அரசாங்கங்கள் என்று சொல்லப்படும் பல அரசுகளும், அரசாங்கங்களும் வல்லந்தமான திறனுடைய ஏகபோகத் தனித்தன்மை அற்றவையாக இருப்பதுடன், அவர்களது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் ஆட்புலங்களில் ஒருங்கிணைப்பைக் கொண்டுவர இயலாதவையாக உள்ளன. மக்கள் சார்பாகவும் மக்களுக்காகவும் (அவர்களது பிரஜைகள்) ஆட்சி செய்யாமல் அவர்கள் ஒன்றில் தமது பிரஜைகள் மீது சட்ட பூர்வமான அதிகாரத்தையும், பாதுகாப்பையும் பிரயோகிக்க இயலாதவர்களாக உள்ளனர், அல்லது சூறையாடுபவர்களாய் அல்லது சுரண்டுபவர்களாய் உள்ளனர். சர்வதேச சட்டம் இந்த அரசுகளுக்கு இறைமை சமத்துவத்தை வழங்குகிறது. ஆனால் இந்த அரசுகள் தாமாகவே தமது மக்களுக்கு இறைமையின் நலன்களையும் மனித பாதுகாப்பையும் வழங்க இயலாதவர்களாக உள்ளன.

பற்றாக்குறையான இந்த இறைமை உட்பொருள் தொடர்பாக மோதுகைத் தீர்வில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் இருதலைப்பொறி நிலையில் உள்ளனர். உத்தியோகபூர்வ, உத்தியோகபூர்வமற்ற செயற்பாட்டாளர்கள் இணக்கம் காணப்பட்ட ஒப்பந்தங்களை அரசுகள் வழங்கமுடியாதிருக்கும்போது தோல்வியடைந்த, தோல்வியடைந்து கொண்டிருக்கும் இந்த அரசுகளால் முடியும் எனக்கருதினால் இணக்கச் செயல்முறை நடைமுறைப்படுத்துகையில் இல்லாதொழிக்கப்படும். ஊழலான, செயற்திறனற்ற, குறைபாடான அரசுகளுடன் இணக்கப்பேச்சு நடாத்துவதில் எவ்வித பயனுமில்லையென்ற எதிரான ஊகம் பிரயோகிக்கப்பட்டால் வன்மையான பிரச்சினைகளுக்கு இணக்கத்தீர்வு எதுவும் கிட்டாது. அரசியல்ரீதியான இயலுமைப்பரப்பென்பது பாசாங்கு என்னும் ஆறுதலைப் பூதத்துக்கும், ஆற்றலின்மை என்னும் கடற் சுழிக்கும் இடையே காணப்படுகிறது.

மோதுகைத்தீர்வு தொடர்பான பணியாளர்கள் அனைவரும் (உத்தியோகபூர்வ, உத்தியோக பூர்வமற்ற) எதிர் நோக்கும் சவாலானது, சாத்தியக்கூறின் எல்லை எதுவென்றும், இடையீடுகள் மக்களிடையே நீதியான நீடித்திருக்கக்கூடிய உறவுகளை ஏற்படுத்தக்கூடியது சாத்தியமா, சாத்தியமில்லையா என்பதையும் இனங்காண்பதே ஆகும்.

அரச முறைமைகளினால் உருவாக்கப்படும் அல்லது அவர்கள் முகங்கொடுப்பதற்கு விரும்பாத அல்லது இயலாத பிரச்சினைகளைக் கையாளுவதற்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு உதவும்வகையில் அவர்களுடன் பணியாற்றவேண்டிய ஒழுங்கமைப்பு ஒன்று அரசசார்பற்ற அமைப்புகளுக்கு உண்டு. இதன் விளைவாக அரச முறைமையின் பிரதான கூறுகளைவிட கூடுதலான அமைப்புமுறையான தொழில்சார் திறமைகளை சில சிவில் சமூகக்குழுக்கள் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். உதாரணமாக புருண்டியில் மனித உரிமைகள் அமைச்சு நாட்டினுள் பணியாற்றும் பல அரசசார்பற்ற அமைப்புக்களைவிடக் குறைந்த வளங்களையே கொண்டிருக்கின்றது.

இச்சமச்சீரற்ற தன்மை இரு ஆழமான பிரச்சினைகளை எழுப்புகின்றது. முதலாவதாக சிவில் சமூகத்துறை எவ்வாறு தனது ஆர்வங்களை அரசினது விருப்புகளுடன் நேருக்கு நேர் இணைத்துக் கொள்கிறது என்பது. இரண்டாவதாக அரசுகள் பயனுறுதிமிக்க ஆளுமைத் திறனற்ற அல்லதுகுறைபாடுடையனவாக சூறையாடும் அத்துடன் / அல்லது ஊழல் மிகுந்ததாய் இருக்கும்போது இவை பயனுள்ளவையாக இருக்குமா இல்லையா என்பது. இரண்டாவது வாதம் அரசாங்க, மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான செயற்பாட்டாளர்களை எதிர்நோக்குகின்றது. உத்தியோகபூர்வ இடையீட்டாளர்கள் தோல்வியடைந்த அல்லது தோல்வியடைந்து வரும் அல்லது சூறையாடும் அரச முறைமைகளால் பயனுறுதிமிக்க ஆளுமையை, புரிய முடியுமென்று, அவர்களால் உண்மையில் அவ்வாறு புரிய முடியாதபோதும்கூட, கருதினால் அல்லது சுரண்டப்பட்ட பிரஜைகளுக்கு இது மிக ஆழமான ஒரு மாயையாக இருக்கும். இது நிச்சயமாக நம்பகமற்ற இணக்கப்பேச்சுக்களை விளைவுறுத்துவதுடன், எந்த ஒப்பந்தமும் பயனுறுதியுடன் செயற்படுத்தப்படுவதை சாத்தியமற்றதாக்கும். சட்டப்படி செல்லுபடியாகும் அதிகாரங்களை கையாளாதிருப்பது இணக்கத்துக்கு வழி வகுக்காது. ஆகவே, வன்முறையான மோதுகைகள் சிவில் சமூக அரசாங்க மட்டங்களில் தீர்வுகளைப் போலவே பல பிரச்சினைகளையும் உருவாக்கும்.



## 2.2 நிஜசெய்நிலை அரசியல் குறித்த விமர்சனம்

மோதுகைத்தீர்வுத் துறையானது ஓரளவுக்கு அரசியல் யதார்த்தத்துக்கும், தேசநலன்களை முன்னிலைப்படுத்தும் கொள்கைக்கும் ஒரு மாற்றாக அபிவிருத்தியுற்றது. அதிகாரம் பாரிய தூண்டுதலாக இருந்தபோதும், அநேகமான மக்களுக்கு அது பிரதானமானதல்லவென்று மோதுகை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மாறாக, கூட்டுறவுத்தொடர்புகளும், அடையாளத்துவம், பாதுகாப்பு, உரிமைப்பாடு, நலனோம்பல் ஆகிய தேவைகளைத் திருப்திப்படுத்தும் அவாவும் மனிதத் தூண்டுதல்களுக்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்த மூலங்களாகும்.

மோதுகைத் தீர்வுப் பணியாளர்கள், எப்போதும் அரசு மற்றும், அரசியல் முறைமைகள் தொடர்பாக ஓரளவு இருமனப்போக்குடையவர்களாகவே இருந்துள்ளனர். ஒருபுறம் அரசினது முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கான விருப்பும், மறுபக்கம் அரச அதிகார ஏகபோகத்தை விமர்சனம் செய்வர்களாகவும் ஒழுங்கினையும், ஸ்திரத்தன்மையையும் உருவாக்கும் பிரதான மார்க்கங்களாக அச்சுறுத்தலையும், பலவந்தத்தையும் நிராகரிப்போராகவும் உள்ளனர். இதன் காரணமாக பல மோதுகைத்தீர்வுப் பணியாளர்கள் சிவில் சமூக குழுக்களுடன் இணைந்தும், அவர்களூடாகவும் அரசியல் நடத்தையை மாற்றுவதற்கு முயல்வதில் தீவிர நாட்டம் செலுத்திவந்துள்ளனர்.

இவ்வத்தியாயத்தின் பிரதான வாதவிடயங்களுள் ஒன்று அரசு எவ்வாறு வன்முறையான மோதுகைகளை உருவாக்குகின்றது அல்லது சில சமயங்களில் தூண்டுகின்றது என்பதை குறிப்பாக ஆராய்வதற்கு கூடுதலான நேரத்தை செலவிடவேண்டியதன் அவசியமாகும். இது ஏற்படாவிடினும், மோதுகைக் கூருணர்வுள்ள அரசியலில் (சமாதான மோதுகைத்தாக்க மதிப்பீட்டு (PCIA) முறைமை மோதுகைக் கூருணர்வு அபிவிருத்திக்கு பங்களித்துள்ள அதேவிதமாக) அபிவிருத்தி ஏற்படாவிடினும், அரசியல் நிகழ்ச்சி நிரல் தொடர்ந்தும் குறைந்த பகைமை உணர்வுள்ள, பிரச்சினை நோக்கிய அரசியலைவிட நலனை முன்னிலைப்படுத்தும் கொள்கை நாட்டின் நலன் நோக்கியே திட்டமிடப்படும். இது ஒரு இலகுவான பணியல்ல (சான்றாக பயங்கரவாதத்துக்கு எதிராகப் புதிதாக பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தத்தின்போது இலட்சியவாத அரசியலிலிருந்து பின்வாங்குதல்). ஆனால், யுத்தத்துக்கும், வன்செயலுக்கும் மாற்றாக வன்செயலற்ற மாற்றுவழிகள் பரிசோதித்து அபிவிருத்திசெய்யுமுகமாக பொறுப்பேற்கப்படவேண்டியதொன்றாகும்.

நாட்டின் நலன் குறித்த வாதத்துக்கு சவால் விடுக்க வேண்டியதற்கான மற்றுமொரு காரணம் என்னவெனில் உலகின் பெரும் மோதுகை வலயங்களிலுள்ள அரசு முறைமைகள் குறைபாடுகளுடையனவாகவும், தீர்வினைக் காண்பதைவிடுத்து வன்செயல்களை ஆரம்பிப்பதுடனும், நீடிக்கவைப்பதுடனுமே தொடர்புடையனவாகவும் இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளமையாகும். இது அத்தகைய வன்செயல்களைக் கையாளுவதற்கு வழிவகைகளை நாடும் மோதுகைத் தீர்வுப்பணியாளர்களுக்கு குறிப்பாகப் பல பிரச்சினைகளை உருவாக்கும்.

## 2.3 வன்செயலுக்கான அரசியல் மூலங்கள்



17 அண்மைக்கால, சிக்கலான மனிதாபிமான அவசரகாலநிலைமைகளின் (CHE) ஆய்வில் கலெவி ஹோல்ஸ்ட்டி (நவ்ஸீஜரினாலும், பிறரினாலும் 2000, தொகுதி 2,4 இல் எடுத்துக் காட்டப்பட்டவாறு) இத்தகைய அவசரகால நிலைமைகள் அல்லது பாரியஅளவிலான ஒழுங்கமைக்கப்பட்ட வன்செயல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் எனக் கூறுகிறார்:

> *இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தெளிவான இன, மொழி அல்லது மத சமுதாயங்களுடன் 1945இன் பின்னர் சுதந்திரமடைந்த நாடுகளிடையே; தெளிவான சமூக குழுக்களிடையே அரசாங்கங்களின் அரவணைப்பின்மை மற்றும் அடக்குமுறை இருக்கும்போது திருட்டார்வமுடையவர்கள் அல்லது நிலைபேறாக்கப்பட்ட சிறுபான்மையினரின் ஆட்சிச்சட்டம் உள்ளபோது அரசாங்க சட்ட நிலைத்தகவு நலிவாக உள்ளபோது அவசரகாலநிலைமை ஆபத்து ஏற்படக்கூடும்.*

இவை அனைத்தும் கட்டமைப்பு வன்செயலை ஏற்படுத்துவதுடன் கூடுதலான மோதுகைக் கூருணர்வு அபிவிருத்தி உத்திகளுக்கு என வகுக்கப்பட்ட கருவிகளினால் இனங்காணப்பட்ட அரசியல் இடர் காரணிகள், காட்டிகளுடன் இயைபுள்ளனவாக உள்ளன. 17 விடயநிகழ்வுகளுக்கு தனது ஆய்வினைப் பிரயோகித்து, முடிவாக வன்செயல் நடத்தைகளைத் தூண்டுவது இன வெறுப்போ, குழுப் பிரிவுகளோ அல்லவென்றும், ஆனால் தமது கட்டுப்பாட்டிலுள்ள சமுதாயத்தின் வேறுபட்ட குழுக்களுக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட வன்செயல்களை வேண்டுமென்று, திட்டமிட்ட செயல்களால் தூண்டும் அரசியல்வாதிகளும், அரசாங்க உத்தியோகத்தர்களுமேயென்றும் ஹோல்ஸ்ரி தனது முடிவில் தெரிவித்துள்ளார்.

> *ஆட்சி எதிர்ப்பு அடங்கலான சிவில் யுத்த வகைகளைவிட பெருமளவு விபத்துக்கள் அரசாங்கங்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கொலைகளின் விளைவாகவே ஏற்படுகின்றன. அத்தகைய அவசரகால நிலைமைகளைத் தடுப்பதற்கு நேரகாலத்தோடான எச்சரிக்கைச் சுட்டுகள் சர்வதேச சமுதாயத்துக்கு உதவவில்லை (ibid)*

இம் முடிவு வேரினென் அவர்களால் (அதேவிடயம் 437) மேலும் தெளிவுபடுத்தப்படுகிறது. அவர் கூறுவது யாதெனில்:

> *நலிவான அரசும், தமது சொந்த நலன்களை நாடிச் செல்வதில் வேட்கையுள்ள சலுகை பெற்ற வர்க்கத்தினரும் இருக்கும் சமூகங்களிலேயே மனிதாபிமான சிக்கல்கள் எழுகின்றன என்பதே எனது பிரதான கருதுகோளாகும். காலனித்துவத்துக்குப் பிந்திய-தந்தைவழி அரசில், வலுமிக்க தலைவர் அதிகாரக் கூம்பகத்தின் உச்சியிலிருந்துகொண்டு சிவிலியன் இராணுவ மேல்மட்டத்திலுள்ள பழைய நண்பர்களின் வலையமைப்புக்கு உதவுகிறார். அரசியல் முறைமையில் நலன் பெறுவோர் பலவந்தமாகவும், கட்சிக்காரர்களினாலும் தீர்மானிக்கப்படுகின்றனர். இது அனேகமான சுற்றயல் அரசுகளின் முக்கிய பண்புகளாகும்.*

அவர் கருதுகோளை அரசின் சூறையாடும், வாடகை நாடும் நடவடிக்கைகளினூடாக அரசியல் பொருளாதாரத் துறைகளுக்கிடையிலான இயக்கவியலைத் தெளிவுப்படுத்தும் பொருட்டு அபிவிருத்திசெய்கிறார். இதன் மொத்த விளைவு அரசு சூறையாடல், சுரண்டல், அராஜக, நலிந்த அல்லது தோல்வியடைந்த அரச முறைமைகள், அத்துடன் வற்புறுத்தல், பலவந்தம்மீது அதிகரித்த நம்பிக்கை வைத்தல், எதிர்ப்புச் சக்திகளுக்கு எதிராக அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட வன்செயல்கள் ஆகியவை ஆகும்.

இடையீட்டு உத்திகளை வகுத்தமைக்கும்போது இந்த அடிப்படை உண்மைகளை மோதுகைத்தீர்வு பணியாளர்கள் ஏற்றுக் கொள்ளாவிடில் அவர்கள் அறியாமலே நீதியற்ற, நீடித்திருக்க முடியாத நிறுவனமுறை அடிப்படையிலான சமாதான மாயைகளை உருவாக்கலாம். அரசினது வன்கண்மையான அதிகாரமும், சந்தையின் பரிமாற்ற அதிகாரமும் ஊழல் அரசியல்வாதிகளாலும், உயர்மட்டத்தினராலும் அழிக்கப்பட்டால் அது நீடித்திருக்கக்கூடிய சமாதானத்துக்கான வாய்ப்பினை மிகவும் சாத்தியமற்றதாக்கும். அத்தகைய ஒரு சூழ்நிலையில் பிற சிவில் சமூகங்களுடனும், அவையூடாகவும் பணியாற்றுவதன் மூலம் (குடும்பங்கள், மத, கல்வி, சுகாதாரம், பிற) சமுதாயத்தின் ஒன்றிணைந்த பலத்தை திரட்ட முயலுவது அவசரகால நிவாரணம், மனிதாபிமான உதவி என்ற அடிப்படையில் உதவுவதாக இருக்கும். எவ்வாறாயினும், நடுத்தர அல்லது நீண்ட காலத்தில் அது நீடித்த சமாதானத்தை அளிக்காது. அது "நன்றாக இருப்பதாக உணரும் காரணியை" மேம்படுத்தக்கூடும். ஆயினும் அவற்றின் சமூகப்பணிகளை நிறைவேற்றமுடியாத அரசின் இயலாமை காரணமாக தீவிரமான மனக்கசப்பை ஏற்படுத்தக்கூடும். இந்த நல்ல முனைப்புகள் எப்போதும் ஊழல் நிறைந்த அரசாங்கங்களினாலும் அதிகரித்துவரும் அரசியல் குற்றங்களினாலும் இல்லாதொழிக்கப்படும்.



## 2.4 அரசியலை நிறைகுற்றமயப்படுத்தல்

இது முக்கியமான மூன்று பிரதான அம்சங்களால் தனிச் சிறப்பு பெறுகின்றது.

**(i) சட்டவாட்சியைக் குடைகவிழ்த்தல்** :இது உலகின் பல மோதுகை வலயங்களில் நிகழ்ந்துள்ளது. முதலாவதாக, பொலிஸார் ஊழல்மிக்கவர்களாகின்றனர். இரண்டாவதாக, நீதிமன்றங்களின் சுயாதீனத்துக்குச்சவால் விடுக்கப்படுவதுடன் நீதிமன்ற முறைமை தகர்க்கப்படுகின்றது. அராஜக அரசுகள், உதாரணமாக, சியரா லியோன், லைபீரியா, சோமாலியா ஆகியவை கௌரவமான சட்ட முறைமை அத்துடன் சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய வழிகள் ஏதுமின்றி மத்திய திகாரத்தினால் முழுமையான உடைவுக்கு உட்பட்டன. சுருங்கக்கூறின், இதனால் அறியப்படுவது என்னவெனில் தனிப்பட்ட நட்புகளும், உறவுகளும் பிரதானமாக அடிப்படைப் பாதுகாப்பு வழங்குவையாக உள்ளன.

**(ii) தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமை**: சட்டவாட்சி குடைகவிழ்க்கப்படும்போது தண்டனை விலக்கீட்டுரிமை கலாசாரங்கள் எழுகின்றன. தண்டனை விலக்கீட்டுரிமை ரூவான்டாவிலும்,

முகாபே அரசாங்கம் சட்டவாட்சியை அழித்த சிம்பாப்வேயிலும் நிகழ்ந்ததுபோல் பாரிய அளவிலான மனித உரிமை துஷ்ப்பிரயோகத்துக்கு அல்லது இனக் கொலைகளுக்கு இட்டுச்செல்லும். சிலருக்கு மட்டும் அத்தகைய தண்டனை விலக்கீட்டுரிமை இருந்து, பிறருக்கு இல்லாதபோது பொருளாதார, அசியல் அதிகாரங்கள் உள்ளவர்கள் மட்டுமே சட்டத்துக்கு மேலே எழுவதுடன் அத்தகைய அதிகாரம் இல்லாதவர்கள் தன்விருப்பமான, ஊழல் நிறைந்த அடக்கியாளும் சட்டத்துக்கு உட்படுகின்றனர். உதாரணமாக, ஒப்பீட்டளவில் வலுவற்றவர்களும், அதிகாரமற்றவர்களும் தன் விருப்பமான பொலிஸ் தண்டப்பணங்கள் போன்ற சிறு ஊழல்களுக்கும், தேசிய வருமான உடைமை கவர்தல் போன்ற மேல்மட்ட ஊழலுக்கும் உட்படுகின்றனர். அவர்களே சிறிய ஊழல்களுக்காகத் தண்டிக்கப்படும் அதே வேளையில் பல லட்சக்கணக்கில் ஊழல் புரிவோர் தமது அதிகாரத்தைப் பிரயோகித்து தண்டனையிலிருந்து விலக்குரிமை பெறுகின்றனர்.

**(iii) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம்** : ஐக்கிய இராச்சியத்தில் (UK) தேசிய குற்றவியல் புலனாய்வு சேவை (NCIS) பிரித்தானிய பாதுகாப்புக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் பெரும் அச்சுறுத்தல்களாக உள்ளன என கடந்த வருடம் வாதிட்டுள்ளது (NCIS 2000). அபிவிருத்தி அடைந்து வரும் பல நாடுகளில்கூட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களின் பாரிய கூட்டமைப்புகள் ஜனநாயகத்துக்கும், ஸ்திரப்பாட்டுக்கும் பெரும் அசசுறுத்தல்களாக உள்ளன.

கொலம்பியாவில்போதைப்பொருள் கூட்டமைப்பானது அமெரிக்க ஐக்கிய அரசுடன் (USA) செய்யப்படவிருந்த வேற்றரசுக்கு ஒப்படைக்கும் ஒப்பந்தத்தை தடுக்கும் முயற்சியில் நேரடியாக அரசினை எதிர்த்தனர். காகசஸில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் கூட்டமைப்புகள் கள்ளக் கடத்தற் பொருள்களை கடத்தியதன்மூலம் ஏற்கெனவே நலிவடைந்திருந்த பொருளாதாரத்தை வீழ்த்துவதாக சில சமயங்களில் அச்சுறுத்தல் விடுத்து, இவ்வாறாக தீர்வுகளை புறக்கணித்ததுடன் அவர்களது நடவடிக்கைகளில் தீவிரமான அளவில் வன்செயல்களைப் பிரயோகித்தனர். போல்கன்ஸ் நாட்டில் குற்றவியல் குழுக்கள் பிரதான தேசிய குழுக்களுடன் இணைந்து ஜனாதிபதி மிலோசெவிக்கின் கீழ் சேர்பியாவில் இருந்தது போன்ற குற்றவியல் அரசை உருவாக்கின. கொசோவாவில் கொசோவா விடுதலை இராணுவம் (UCK) மேற்கில் செயற்படும் அல்பேனிய குற்றவியல் குழுக்களுடன் வலுவான தொடர்புகளை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. உலகெங்கணும் பாதுகாக்கும்பொருட்டு பலவந்தத்திலும், ஒழுங்கமைக்கப்பட்ட வன்செயல்களிலும் ஈடுபடலாம். உண்மைநிலை என்னவெனில், ஊழல் எங்கும் அரசியல் செயல்முறைகளை அழித்து நேர்மையான அரசியலை மிகவும் கடினமாக்குகின்றது.



## 2.5 பிராந்திய அரசியல் தாக்கங்கள்

அரசியல் முறைமைகளின் தோல்வி, சட்டவாட்சி அழிவு, அரச அட்டூழியம், பிரதானமான சிறுபான்மையினரின் தொடர்ச்சியான ஓரங்கட்டுதல் ஆகிய அனைத்தும் மோதுகையை உருவாக்கக்கூடிய உள்ளக மூலங்களாகும். இந்த இயக்க ஆற்றலானது, எவ்வாறாயினும், அண்டை அரசுகள் அல்லது பலம் வாய்ந்த வெளிச்சக்திகளால் கடுப்பூட்டப்படுகின்றது. இந்தப்பிராந்திய இயக்க ஆற்றலானது அடிக்கடி தேசிய மோதுகைகளின் பொதுத் தோற்றத்தை வடிவமைத்துத் தீர்மானிக்கின்றன. அத்துடன் அவற்றை உப பிராந்திய, பிராந்திய மோதுகை முறைகளின்படி மிகச்சிறப்பாக பற்றிக்கொள்ளமுடியும். தென் காகசஸில், உதாரணமாக, இரு பாரிய இரு தரப்பு தகராறுகள் உள்ளன (ஜோர்ஜியாவும், அகாசியாவும், ஆர்மேனியாவும், அசர்பஜானும்). இவை இரண்டுமே இரு தரப்பினராலும் தீர்க்கமுடியாதவையாகும். ரஷ்ய அரசாங்கம் மறைமுகமாக அல்லது வெளிப்படையாக ஒவ்வொரு இருதரப்பு பேச்சுவார்த்தை மேசையிலும் உள்ளது. ரஷ்யர்களை உள்ளடக்காத எந்த ஒரு ஒப்பந்தமும் அவர்களால் அடக்கப்படும் அல்லது கெடுக்கப்படும். அதுபோலவே ஆபிரிக்காவில் பிராந்திய தலைமை

அரசுகள் (நைஜீரியா போன்ற) ,அத்துடன் முன்னைய காலனித்துவ அதிகாரங்களில் (u.k) பெல்ஜியம், பிரான்சு) பல வழிகளில் மோதுகைகள் வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருக்கும் முறை, புரிந்துகொள்ளப்பட்டு கையாளப்படும் முறை ஆகியவற்றில் பலவழிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அவர்களுக்கிடையிலான மோதுகைகள் உதாரணமாக “கிரேட் லேக்” தொடர்பாக பெல்ஜியம், பிரான்ஸ் இடையிலான தகராறுகளை இணக்கப்பேச்சுமூலம் தீர்ப்பதற்கான உகந்த சூழ்நிலைகளை உருவாக்காது. மேலும், வெளியக அமெரிக்கா செயற்பாட்டாளர்கள் ஈடுபடுவதற்கான காரணம்-ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்றவையும் மசிடோனியாவிலுள்ள பிறவும் அல்லது கொசோவாவில்போல் வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்புக்கள் (NATO)- தேசிய பிராந்திய ஆர்வங்களினாலும் மோதுகைகள் கையாளப்படும், அத்துடன் நிலைமாற்றப்படும் அவாவேயாகும். இவை அனைத்தும் சிக்கலான உள்ளக,வெளிவாரி உண்மைகளைக் கவனத்திலெடுக்கும் அரசியல் பகுப்பாய்வை முறையான வழியில் நோக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன.

அரசாங்கங்களுக்கிடையிலான, அரசாங்க, அரசசார்பற்ற அமைப்பு மட்டங்களிலுள்ள கடந்தகால மோதுகை இடையீடுகளிலிருந்த ஒரு குறைபாடு ஆய்வு அல்லது இடையீட்டு கட்டங்களில் பொருளாதாரக் காரணிகளை கூட்டிணைப்பதில் ஆர்வமற்றிருந்தமையாகும். வலுவான பொருளாதாரத் தூண்டுதல்கள், வன்செயல்களை நீடிக்கவைக்க விழைவோர் தொடர்பாக கவனம் செலுத்தாது, வன்மையான மோதுகைகளை அரசியல், சிவில் சமூக மட்டங்களில் தீர்க்கலாம் எனக் கருதும் மனப்பாங்கு ஒன்று கடந்த காலங்களில் இருந்துவந்துள்ளது. இது சிலவேளைகளில் பொருளாதார அடிப்படையுடன் மிகவும் தொடர்பற்றதாகக் காணப்படும் உரையாடல்கள், இணக்கப் பேச்சக்கள் ஆகியவற்றில் ஒரு நம்பிக்கையற்ற தன்மையை தோற்றுவித்துள்ளது.

உள்ளூர், தேசிய, பிராந்திய, உலகளாவிய பொருளாதார முறைமைகள் சிவில் சமூக, அரசதுறை மட்டங்களின் செயற்பாடுகளுக்கு ஆதாரமாக உள்ளன. இவை பிரதான சந்தை (தனியார், அரசதுறை) மூலகங்களுக்கு சிலவேளைகளில் ஆதரவளித்து, சில வேளைகளில் மழுங்கடித்து, சிலவேளைகளில் சமாதான முனைப்புகளை வீழ்ச்சியுறச் செய்வதுடன், தமது சொந்த இயக்க ஆற்றலையும் கொண்டுள்ளன. செயற்பாடுகளின் பொருளாதார துறையானது அண்மைக்காலத்தில் உலக வங்கி, ஐக்கிய நாடுகள் (UN) பொருளாதார, கூட்டுறவு அபிவிருத்தி அமைப்பின் அபிவிருத்தி உதவிக்குழு (OECD/DAC) பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் பிஸ்னஸ் லீடர்ஸ்போரம் போன்ற அரச சார்பற்ற அமைப்புக்கள், இனடர்நஷனல் அலேர்ட் (IA), பொருளாதார முன்னுரிமைக்கான மன்றம் (சர்வதேச அலேர்ட்டைப் பார்க்கவும்) போன்ற அமைப்புக்களால் குறிப்பாக கவனிக்கப்பட்டபோதும் மோதுகைத் தீர்வு சமூகத்தினால் (உத்தியோகபூர்வ, உத்தியோகபூர்வ மற்ற) ஒப்பீட்டளவில் குறைவாகவே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மூன்று பொதுவான காரணிகள் உள்ளன. முதலாவதானது ஒப்பீட்டளவில் அத்துடன் முழுமையான உரிமை இழப்புக்கும் அத்துடன் மோதுகைகளை உருவாக்குவதில் இதன் பங்கு பற்றியதுமாகும். இரண்டாவது, அரசுக்கும், குடிமக்களுக்குமிடையே உள்ள சமூக ஒப்பந்த முறிவு தொடர்பாகவும், பிரசைகளின் அரசதுறை, அபிவிருத்தி, நலனோம்பல் தேவைகளை நிறைவேற்றுவதில் இயலாமை பற்றியதும், மூன்றாவது, இயற்கை வளங்களுக்கான போட்டி, கட்டுப்பாடு ஆகியவை தொடர்பானதுமாகும்.



இப்பிரச்சினைகள் அனைத்தும் இத்துறையினுள் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருவதுடன் தற்போது பாரிய, சிறிய மட்டங்களில் அபிவிருத்தியை திட்டமிடுவதற்கு கூடிய மோதுகைக் கூருணர்வுள்ள அணுகுமுறைகளின் தேவையை வலியுறுத்தும் சமாதான, மோதுகைத் தாக்க மதிப்பீடு (ஊஐயு) என்ற குறிப்பான விசேட துறையும் உள்ளது. (கேய்கல்ஸ், லியொன்ஹார்ட் 2001 மற்றும் இத் தொகுதியில் மார்க் ஹொப்மனின் பங்களிப்பைப் பார்க்க).

## 2.6 உந்துசக்தியாக பொருளியல் கோட்பாடு

பொருளாதாரக் காரணிகள் மோதுகைகளில் பாரிய தாக்கத்தைக் கொண்டுள்ளன. போல் கொல்லியர், மற்ஸ் பேர்டல், டேவிட் மலோன் ஆகியோரும், பிறரும் மோதுகைகளைக் காணி உள்ளடங்கலான இயற்கை வளங்களின் உற்பத்தி, விநியோகம் தொடர்பான கட்டுப்பாட்டுக்கான போட்டியினால் விளங்கப்படுத்தமுடியும் என வன்மையாக வாதிடுகின்றனர். (பேர்டல், மலோன் 2002 பார்க்க). இதனைப் பரிசோதிப்பதற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட பொருளியல் புள்ளிவிபரவியல் மாதிரிகள் மோதுகைகளுக்கும் வைரம், பொன், கோல்ட்டன் போன்ற உயர் பெறுமதியுடைய பொருள்களின் எளிதில் கிடைக்கும் தன்மைக்குமிடையே மிகவும் ஆர்வமூட்டும் இடைத்தொடர்பு உள்ளதைக் காட்டியுள்ளன. இவ்வாதங்கள் மோதுகைகளை உருவாக்குவதில் “மனக்குறை” போலவே பேராசையும் சம முக்கியத்துவம் வாய்ந்ததெனத் தெரிவிக்கின்றன (கொல்லியர், ஹோப்லர் 1998 ஐ பார்க்க). அரசியல் இயக்கவியல் போன்று இந்தப் பொருளாதாரத் தூண்டுதல்கள் மோதுகை ஆய்வினுள் அடக்கப்படவேண்டும். யுத்தப்பாங்கான நடத்தைக்கு எதிராக சமாதான நடத்தையைத் தூண்டும்பொருட்டும் போதுமான ஊக்குவிப்பு உத்திகளை அபிவிருத்தி செய்யும்பொருட்டும் மேலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். “முரண்பாட்டு வைரங்களும்,” சியராலியோன், அங்கோலா, கொங்கோ, சூடான் ஆகிய நாடுகளில் வெட்டுமரம், எண்ணெய் போன்ற இயற்கை மூலவளங்களின் சட்டவிரோதச் சுரண்டலும் எதிர்கால மோதுகை மாற்றுநிலையாக்கப் பணிகளில் மூலவள யுத்தம் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கும் என்பதைக் காட்டுகிறது..

இவை நிச்சயமாக யுத்தத்தின் அரசியல் பொருளாதாரத்தின் உள்ளக மோதுகைகளுக்கான காரணங்களை புரிந்துகொள்ள உதவும் பிரதான கட்டுக்கோப்பாக மாறக்கூடிய உதாரணங்களாகும். அத்தகைய ஒரு கட்டுக்கோப்பை, அதிகரித்த பொருளாதாரக் கூட்டிணைவு சிலருக்கு கிளர்ச்சிக்கான புதிய சந்தர்ப்பங்களை அளிப்பினும் பலருக்கு ஓரங்கட்டல்களையும், சிரமங்களையும் அளிப்பதுடன், வன்மையான மோதுகைக்கும் இட்டுச் செல்லக்கூடும் என்பதை உலகமயமாக்கல் சூழலமைவில் புரிந்துகொள்ளவேண்டும். எவ்வாறாயினும் அது இதனைச் செய்யும் வழிகள் மிகவும் சிக்கலானதாகும்.



இந்த விடயம் தொடர்பாக வேயினும் நப்ஸீஜெரும், ஜூஹா ஆவினனும் மிகவும் ஆர்வமூட்டும் ஒரு வாதத்தை முன்வைத்துள்ளனர் (நப்ஸீஜெரும் பிறரும் 2000த்தைப் பார்க்க). அவர்கள் குறைந்த தனிநபர் வருமானம், வருமானத்தில் குறைந்த அல்லது மறை வளர்ச்சி அத்துடன் விவசாய உற்பத்தியில் தேக்கம் ஆகியவை மோதுகைக்கு இட்டுச்செல்லும் பிரதான காரணிகள் என்பதை எடுத்துக்காட்டியுள்ளனர். அத்துடன் அவர்கள் சமமின்மையின் உயர் வீதமானது மோதுகைக்கான சாத்தியத்துடன் “குறிப்பாக இது பிராந்திய, இன, அல்லது வகுப்புகுழுக்களுடன் உயர் சமமின்மைக்கு பங்களிப்பு செய்வதாக அல்லது பிரதிபலிப்பதாக இருப்பின்” (நவ்ஸீஜெரும் பிறரும் 2000 தொகுதி 3) தொடர்புடையது என்று அவதானித்துள்ளனர். மோதுகைகளின் பொருளாதார மூலகங்கள் பற்றிச் சிந்திக்கும்போது அது அபிவிருத்தி அல்லது பொருளாதார உதவி நிழ்ச்சித் திட்டங்களில் முக்கியமான புதிய திசையை சுட்டிக் காட்டுவதால் குழுக்களிடையே கிடையான சமமின்மை முக்கியமான அபிவிருத்தியாகும். இரு பொருளாதார சிக்கனமற்ற காரணிகளாக நப்ஸீஜரும் ஆவினனும் இனங் கண்டுள்ள காரணிகளாவன இராணுவச் செலவும், மோதுகைகளின் கடந்தகால வரலாறுமாகும். பல் ஆண்டுகளாக மோதுகை ஆய்வாளர்களால் யுத்தத்தின்அரசியல் பொருளாதாரம் மீதான பழைய இலக்கியங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை சிறிது ஆச்சரியமாக உள்ளது. ஆனால் அது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு, மிகவும் ஆழமாக வேரூன்றிய, அடங்காத உள்ளக மோதுகைகள்மீதான புதிய சிந்தனையின் மையத்தில் வைக்கப்பட்டிருப்பது ஆறுதலளிக்கின்றது. இக் கருத்தினை தனது சந்தை வன்செயல்கள் என்ற கருத்துடன் ஜோர்ஜ் எல்வேர்ட் என்ற எழுத்தாளர் ஒருவர் மேலும் எடுத்துச் சென்றுள்ளார் (பெட்டி 1 ஐப் பார்க்க).

**பெட்டி 1: வன்செயல்கள் சந்தைகள்**

சந்தை வன்செயல்களை சிவில் யுத்தங்கள், யுத்தப் பிரபுக்கள், திருட்டு ஆகியவற்றால் ஆளப்படும் வன்செயலற்ற பொருள் சந்தையுடன் வன்செயலால் பொருள்கள் கொள்ளப்படுவதை இணைக்கும் பொருளாதாரத் துறையாகப் புரிந்துகொள்ளமுடியும். கைப்பற்றல், பரிமாற்றம் என்ற வன்முறையான, வன்செயலற்ற வடிவங்களுடன் பின்னிப்பிணைந்துள்ள இலாபநோக்கே இந்த நடவடிக்கையின் வழிகாட்டு நெறியாகும். சட்டத் தகவளித்தல் முயற்சிகள் இல்லாதபோதும்கூட தார்மீக, உலக நோக்குமற்றும் அதிகார மோதுகைகள் என்ற பரப்பின் கீழிருந்து சுயமாகப் பரவும் பொருளாதார முறைமை ஒன்று எழுகின்றது. செயற்பாட்டாளர்களின் உணர்வுபூர்வமான நோக்கங்களை (சுதந்திரம், கௌரவம், பழிவாங்குதல் போன்ற) பொருட்படுத்தாது, பொருளாதார ரீதியான இலாபகரமான உத்திகளைத் தொடரும் செயற்பாட்டாளர்கள் மாத்திரமே. நீடித்து நிலைத்திருக்கக்கூடியது சாத்தியமாகும்.

சமகால கொங்கோ / ஸெயாரின் வைரம், தங்கம் கடத்தல், சோமாலியாவில் குவற் போதைப்பொருள் வர்த்தகம், கொலம்பியாவில் மரகதம் கடத்தல், இறுதியாக ஆனால் முக்கியத்துவம் மிக்கதாக சூடான், சோமாலியா, லைபீரியா, பொஸ்னியா ஆகிய நாடுகளில் உணவு உதவிகளைக் கொண்டுசெல்லும் பயணப்பாதுகாப்பு ஆகியவை இந்த "பாதுகாப்பை" குறிப்பிட்ட சில காலப்பகுதியில் பிரதான வருமான மூலமாக ஆக்கியுள்ளன. தனது ஆட்புலத்துக்கூடாக மருத்துவ உபகரணங்களுடன் செல்லும் ஒவ்வொரு லொறிக்கும் லைபீரிய யுத்தப்பிரபு ஒருவருக்கு 1994 இல் உதவி நிறுவனம் ஒன்று 1,000 டொலர் செலுத்தி வந்துள்ளது.

சந்தை வன்செயல்களானது வன்செயல்கள் ஏற்படக்கூடிய இடங்கள், சுரண்டப்படக்கூடிய வளங்கள் ஒத்திருக்கும் சந்தைகள் ஒன்றுடனென்று இருக்கும் போதும் அத்துடன் பொருளாதார சூழல் நடுநிலையாக அல்லது சாதகமாக இருக்கும் போதும் தொடர்ந்து நிலவும்.

மூலம் எல்வோற் 1999

பொருளாதார அம்சத்துக்கான இந்த புதுப்பிக்கப்பட்ட கவனிப்பு அவர்களை மேலும் மோதுகைக் கூருணர்வுள்ளவர்களாக, யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தரப்பினருக்கு அதிலிருந்து அவர்கள் விலகிச்செல்லும் வகையில் பொருளாதார ஊக்குவிப்பு குறைப்புகளையும், சமாதானம் நோக்கி நகர விரும்புவோருக்கு ஊக்குவிப்புகளையும் வழங்கும் தகுதியுடையவர்களாக ஆக்கும் நோக்குடன் சர்வதேச சமுதாய அபிவிருத்தி கொள்கைகளில் நகர்வு ஒன்றினைத் தேவைப்படுத்தும். FSU துணை சஹரான் ஆபிரிக்கா அத்துடன் பிற இடங்களைப் பாதிக்கும் பல மோதுகைகளில் இந்தப் பொருளாதார அம்சங்கள் மிகவும் முக்கியமான தூண்டுதல்களாகவும், மோதுகைகளை நீடிக்கவைத்திருப்பவைகளாகவும் உள்ளன. அவற்றைக் கூடுதலான வெளிப்புலன் நிகழ்வு அம்சங்களுக்குச் சார்பாக புறக்கணிப்பது என்பது அவற்றின் தீர்வுக்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு என்பதையே காட்டும். எதிர்காலத்தில் மோதுகைகளைத் தொடர்ந்து உருவாக்கும் அரசியல் பொருளாதார காரணிகள் பிரமாணப்படுத்தப்படாத, தேசங்கடந்த வர்த்தக வலையமைப்புகள் நலிவான சர்வதேச நிதி முறைமைகள், இடைத்தேசிய கூட்டுறவு அதிகாரம், ஆதார வர்த்தக கொள்கைகள் ஆகியவற்றின் தாக்கம் எனபவற்றை உள்ளடக்கும்.

(i) **பிரமாணப்படுத்தப்படாத இடைத்தேசிய வர்த்தக வலையமைப்புகள்** யுத்தச் சரக்குகளின் பிரமாணப்படுத்தப்படாத அல்லது சட்டவிரோத வர்த்தகம் அவை வைரம், மரம், எண்ணெய்

அல்லது பிற இயற்கை வளங்கள், போதைப்பொருள்கள், துப்பாக்கிகள் எவையாக இருப்பினும், பல ரண்பாடுகள் நீடித்து இருப்பதற்கான காரணத்தை விளக்குபவையாகவே இருக்கும்(டவ்வீல்ட் 1994 ஐப்பார்க்க). தரப்பினரால் இந்த யுத்தப் பொருள்களிலிருந்து பெறப்படும் வருமானம் யுத்தம் நீடித்திருப்பதை ஊக்குவிப்பதற்கான பிரதான காரணமாக உள்ளதுடன், சா்வதேச சமுதாயம் இப்பொருள்களின் பிரவாகத்தைப் பிரமாணப்படுத்துவதற்கும், அவற்றிலிருந்து பெறப்படும் மோதுகைகளுக்குத் தூபமிடும் நிதிகளை மட்டுப்படுத்துவதற்குமான வழிகளைத் தொடா்ந்தும் நாடும்.

(ii) **நலிவான சா்வதேச நிதி முறைமை**: ஆசியாவின் 1997/8 இன் நிதிப் பொருளாதார சிக்கல்களுக்கும் மேலும் பல அபிவிருத்தியடையும் பொருளாதாரத்துக்கும் பரவிய தொற்றானது சா்வதேச நிதி முறைமையின் நலிவான தன்மையையும், சா்வதேச நிதி நிறுவனங்களையும் (IFIs) பிற சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் மிகவும் வெளிப்படையானதாகவும், வழங்குநா்களுக்கும், பெறுநா்களுக்கும் வகை சொல்லக்கூடியதாகவும் ஆக்கும் பொருட்டு நிதி முறைமையில் சீா்திருத்தம் செய்யப்படவேண்டிய தேவையையும் கவனத்துக்குக் கொண்டுவந்தது. அக்காலத்தில் அதிகம் போற்றப்படாவிடினும் கூட, புதிய தாராள பொருளாதார சீா்திருத்தங்கள், அரசியல் ஸ்திரமின்மை இறுதியாக மோதுகைகள் ஆகியனவற்றுக்கு இடையே உள்ள தொடா்புகள், அதிகரித்த முக்கியத்துவம் பெற்றுவரும் பிரச்சினைகளாகும். உதாரணமாக, இந்தோனீசியாவின் பொருளாதார சீா்திருத்தங்களுக்கும் ஆச்சேயிலும் பிற மாகாணங்களிலும் வளா்ந்து வரும் வன்செயல்களுக்குமிடையே வாதிடக்கூடிய தொடா்புகள் இருப்பதாகத் தோன்றுகிறது. சூசன் வுட்வா்ட் (1995) பொருளாதார சீா்திருத்த செயல்முறைகள் நிச்சயமாக பால்கனின் அரசியல் இடைமாற்றத்தை சிக்கலாக்கியுள்ளன என வாதிடுகின்றார். எவ்வாறாயினும் மிகவும் அண்மிய ஆய்வில், கிறிஸ்ரியன் மொரிசன் (நவ்ஸீஜெரும்பிறரும் 2000 தொகுதி 2, 4 இல் குறிப்பிடப்பட்ட) சா்வதேச நாணய நிதியம் (IMF) நிலைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள், உள்;ா் அதிருப்தியை நிச்சயமாக உருவாக்கினும், பெருமளவிலான மனிதாபிமான அவசரகால நிலைமைகளை உருவாக்காது எனத் தெரிவிக்கின்றாா்.



> *அவா் (மொரிசன்) “மென்மையான அடக்குமுறையையும்” (உதாரணமாக வேலை நிறுத்தங்கள், ஆா்ப்பாட்டங்கள், அடக்கப்படும் போது மரணத்துக்கு இட்டுச் செல்லக்கூடிய மிதமான அரசியல் ஸ்திரமின்மை அடங்கலான) வன்செயல்களை பாரிய அளவில் கொண்ட “வன்மையான அடக்குமுறையையும்” வேறுபடுத்திக் காட்டுகின்றாா்.*

இவ்வாதத்தில் IMF இனதும், பிற நிதி நிறுவனங்களினதும் நடவடிக்கைகள் குறுகிய காலத்துக்கு சனத்தொகையின் சிறிய பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தீவிர மனிதாபிமான, அவசரகால நிலைமைகளை ஏற்படுத்தக்கூடும். எனினும் அவை பிரதான அல்லது பாரிய காரணங்களைவிட முரண்பாடுகளைத் துரிதப்படுத்தக்கூடிய சாத்தியம் உண்டென மொரிசன் கூறுகின்றாா்.

(iii) **இடைத்தேசிய கூட்டுத்தாபனங்களின் அதிகாரம்**: பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் (TNCs) பல உள்நாட்டு மோதுகைகளில் (அங்கோலா, சூடான், நைஜீரியா போன்ற) பிரதான செயற்படுநா்களாக இருந்துள்ளனா். அவா்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளாதார அக்கறை பாதுகாக்கப்பட வேண்டியதுடன், அவை மோதுகையில் முடிவடைந்த பல சந்தா்ப்பங்களும் உண்டு. (உ-ம் நைஜீரியாவில் ஷெல், கொலம்பியாவில் BP) அத்துடன் TNC க்களிடமுள்ள செல்வமும், வளங்களும் அடிக்கடி பிற அரச, அரசசாா்பற்ற செயற்பாட்டாளா்களுக்கு பொருளாதார விவகாரங்களில் குறிப்பிடத்தக்க ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவா்களது ஒப்பீட்டளவிலானஅதிகாரமின்மையையும், இயலாமையையும் நினைவூட்டுகின்றது. அவா்களது முதலீடுகள், தொழில் வாய்ப்பு, பிற தீா்மானங்கள் ஆகியவை வன்செயல்களை உருவாக்கும் வழிகளைப்பற்றிய கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய தமது பொறுப்பினை கூட்டுத்தாபனங்கள் அதிகரித்த அளவில் ஏற்றுக்கொண்டுள்ளதுடன், தாம் பணியாற்றும் பிரதேசங்களில் மோதுகைகளைத் தீா்ப்பதற்கு ஆக்கபூா்வமான பங்கினை மேற்கொள்வதற்கு அவா்களுக்கு அதிகரித்த சந்தா்ப்பங்களும் உண்டு(அலோ்ட் 2000 ஐப் பாா்க்க).

**(iv) உதவிகளினதும், வர்த்தகக் கொள்கைகளினதும் தாக்கம்** :அபிவிருத்திக்கும், மோதுகைக்கும் இடையே உள்ள தொடாபும், சா்வதேச சமுதாயங்களினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் உதவி எவ்வாறு மோதுகைகளைத் தணிப்பதற்குப் பதிலாக தொடா்ந்தும் அதிகரிக்கின்றது என்பதும் வாதத்துக்குரிய விடயமாகும். மனிதாபிமான உதவியின் எதிா்மறையான தாக்கம் சிலரால் மோதுகைகளைத் தூண்டும் பிறவற்றை விட ஒப்பீட்டளவில் சிறியதென சிலா் கருதினாலும், வேறு சிலா் (பல அசாநி கள் அடங்கலாக) அதனை பங்களிக்கும் காரணியாகக் கருதுகின்றனா். அது அரசாங்கங்களுக்கு அரசியல் ஆதரவு வழங்குவதுடன், வழங்குநா்களுக்கு சமூகச் செலவுகளை எதிரீடு செய்வதற்கு இடமளித்து அவ்வாறு சேமிக்கப்பட்ட பணத்தை இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றது. (உவின் 1998 ஐப் பார்க்க) கொங்கோ யுத்தம் இதற்கு முக்கிய உதாரணமாகும். அபிவிருத்தி உதவி கூடுதலான மோதுகைக் கூருணா்வை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென எதிா்பாா்க்கப்படுகின்றது. ஆனால் தேசிய, பல்தரப்பு கொடையாளி முகவராண்மைகளுக்கு அபிவிருத்திக்கான இந்த மோதுகைக் கூருணா்வு அணுகுமுறையை பயனுறுதியுடன் செயற்படுத்துவது கடினமாக இருக்கக்கூடும். எனினும், விரிவான அபிவிருத்தி விவாதங்களில் உலக வா்த்தக நிறுவனத்துக்கு (WTO) அதன் கொள்கைகளை சீா்திருத்தி,T மேலும் கூடுதலாக வெளிப்படையாக செயற்படுத்தும் பொருட்டு அழுத்தம் கொடுக்கப்படும்போது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வறுமைத்தணிப்பை வா்த்தக உறவுகள் எவ்வாறு பாதிக்குமென புதுபிக்கப்பட்ட கவனம் செலுத்தப்படும். EU ஏற்கெனவே தனது வா்த்தகக் கொள்கைகள் மோதுகைகள்மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துமென்பதில் ஆபிரிக்க, கரீபிய, பசுபிக் (ACP) நாடுகளின் கொட்டனூ ஒப்பந்தத்தினூடாக கவனம் செலுத்தியுள்ளபோதும், எதிா் காலத்தில் இந்த விடயங்கள் தொடா்பாகவும் கவனம் செலுத்தும்படி WTO வற்புறுத்தப்படலாம்.

எதிா்கால மோதுகைகள்மீது தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய சூழல் பிரச்சினைகள்போன்ற பிற காரணிகளும் நிச்சயமாக உண்டு. இவை துரிதப்படுத்தப்பட்டு கட்டுப்பாடு ஏற்படுமா அல்லது பெருகுமா என்பது வாதத்துக்குரிய வேறொரு விடயமாகும். பாதுகாப்பான, தூய குடிநீருக்கான அணுகுகைமீதான எதிா்வு கூறப்படும் மோதுகைகள் தட்டுப்பாட்டுக் காரணிகளால் தெளிவாக மேலும் அதிகரிக்கப்படும். செல்வத்தை உருவாக்கும் கனிப்பொருள்கள் மீதான மோதுகைகள் இருக்கும் செல்வத்தை பாதுகாத்து மேம்படுத்துவதில் காட்டப்படும் அக்கறையினால் தூண்டப்படும். குழுக்கள் செல்வத்தை உருவாக்கும் வளங்கள்மீது கட்டுப்பாட்டைப் பெறுவதற்கு போராடும்போது வறுமையைவிட சூழல் செல்வங்களே மோதுகைகளைத் தோற்றுவிக்கும் பிரதான காரணியாக இருக்குமென போ்ஹெட் என்பவா் வாதிடுகின்றாா். (நவ்ஸிஜெரும் பிறரும் 2000 இல் தொகுதி 1 147-179 ஐப் பாா்க்க). வளங்களின் கட்டுப்பாட்டுக்காகப் போராடும் செல்வந்த அல்லது அரசியல் தொடா்புடைய குழுக்களாக சமூகம் பிளவடையுமென்றும், கைவிடப்பட்டவா்களே போராட்டங்களுக்குப் பலியாக்கப்படுவாா்களென்றும் வாதிடுகின்றாா்.

## 2.7 நீண்டகால மோதுகை இயக்கவியல்

அடுத்த 15 இலிருந்து 20 வருடங்களுக்குள் வன்மையான மோதுகைகள்மீது தாக்கம் செலுத்தக்கூடிய பல நீண்டகால உலகளாவிய இயக்கவியல்கள் உண்டு. இவற்றுள் அனேகமானவற்றுக்கு அவற்றைக் கையாளுவதற்கெனத் தயாரிக்கப்பட்ட குறிப்பான தேசிய சா்வதேச கொள்கைகள் தேவைப்படும். அத்தகைய மூன்று மூலங்களாவன: சமுதாய குடிசனப்பரம்பலியல், அகதிகளும் உள்;ரில் இடம் பெயா்ந்த மக்களும் (IDP) அத்துடன் தாயகத்திலிருந்து வெளியேறுபவாகள்.

- **குடிசனப்பரம்பல் காரணிகள்** அநேகமான அண்மைய சிவில் யுத்தங்கள் வேலையற்ற அல்லது குறைவான வேலையுடைய இளைஞா்களால் மேற்கொள்ளப்படுவதால் குடிசனப்பரம்பல் காரணிகளை எதிா்காலமோதுகை மூலங்களுடன் கருதும்போது கவனத்தில் எடுக்கவேண்டும். உலக சனத்தொகை

2001 இல் 6.1 பில்லியனாகவும், 2015 இல் 7.2 பில்லியனாகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரிப்பின் 95 சதவீதத்துக்கு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், அநேகமாக துரிதமாக விரிவடையும் நகரப்பிரதேசங்கள் வகைசொல்லும். இந்நாடுகள் பலவற்றில் நலிவான அரசியல் முறைமைகள் உள்ளதென்பதுடன், சனத்தொகை வளர்ச்சியும், நகர மயமாக்கலும் இணைந்து கிராமப்பிரதேசங்களின் வளங்களைக் கவருவதன்மூலமும், ஏற்கெனவே அழுத்தப்பட்ட உழைப்பாளர் சந்தையில் மேலும் அழுத்தத்தைக் கொண்டுவருகின்றன. பல அரசுகளில் இப்பொழுது 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விகிதாசாரமற்ற எண்ணிக்கை உள்ளது. மோதுகை வளச் சாத்தியவள வலயங்களிலுள்ள வேலையற்ற இளைஞர்கள் தாம் வன்செயல் அரசியல் (அல்லது போலி அரசியல்) இயக்கங்களில் சேரத்தயாராக உள்ளனர். இவர்களில் பலர் சமாதான வழிகளில் உழைத்து வாழ்வதைவிட, ஆயுதக்குழுக்களுடன் சேர்ந்து கொள்ளையடித்து வாழ்வது மேலுஞ்சிறந்ததென்று எண்ணக்கூடும். (பார்க்க ஜாக்சனும், பிறரும் 2001,1)

- **உலக அகதிகள் நிலை:** இது தொடர்ந்தும் அதிருப்தியை உருவாக்கி படைகளுக்கும், ஆயுதக் குழுக்களுக்கும் வளமான ஆட்சேர்ப்பு வாய்ப்புகளை உருவாக்கும். 1970இல் இரண்டு மில்லியன் அகதிகளே இருந்தனர். 2001 அளவில் இந்த எண்ணிக்கை 21 மில்லியனாக அதிகரித்துள்ளதென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் தூதராலயம் (UNHCR) காட்டியுள்ளது. பலஸ்தீன அகதிகளுக்கு தீர்வு எதுவும் தென்படாமையால் மத்திய கிழக்கின் அப்பகுதியில் மோதுகைகள் தொடர்வது நிச்சயம். மேற்கு, மத்திய ஆபிரிக்கா, மத்திய ஆசியா, கோகசஸ் ஆகியவற்றின் பெரும் எண்ணிக்கையான அகதிகள் பிரச்சினை புரையோடவிடப்பட்டால் கெரில்லா படைகள் உருவாவதற்கு இடமளிக்கும். உதாரணமாக, ஆப்கானிஸ்தானிலிருந்து அகதிகள் பெயர்ந்துசெல்வது பாகிஸ்தானையும், அப் பிரதேசத்தையும் நிலைகுலைக்கும். இந்த மனிதாபிமான கேடுகள், எதிர்கால முரண்பாடுகளுக்கு பாரிய மூலங்களாக கொள்ளப்படவேண்டும். அத்துடன், ஆபிரிக்காவிலும், பிற இடங்களிலும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிடில், மோதுகைக்கான மற்றொரு மூலம் உருவாகுமென்பதை உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான மக்கள் எடுத்துக்காட்டுகின்றனர்

- **தாயகத்திலிருந்து வெளியேறும் குழுக்கள்:** (Diaspora குழுக்கள்) நாடு கடத்தப்பெற்ற அல்லது குடிபெயர்ந்த குழுக்கள் தமது தாய்நாட்டிலுள்ள கெரில்லா இயக்கங்களுக்கு அடிக்கடி நிதி உதவி வழங்கிவருகின்றன. உதாரணமாக, வெளி நாட்டிலுள்ள தமிழர்கள் கலகக்காரர்களுக்கு பல மில்லியன் டொலர்களை ஆண்டுதோறும் அனுப்பிவருகிறார்கள் என ஊகிக்கப்படுகின்றது. தாயகத்திலிருந்து வெளியேறும் தமிழ், சிங்கள மக்களின் அக்கறையை கணக்கிலெடுக்காது இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயலுவது அப் பிரச்சினைக்கு பகுதியான தீர்வையே அளிக்கும்.



## 3. சமாதானத்தைக் கட்டியெழுப்பி வன்மை நிறைந்த மோதுகைகளை மாற்றுநிலையாக்கலிலும் நீதியான சமாதானத்தை ஊக்குவிப்பதிலும் பெறும் வகிபாகம்

ஒழுங்கமைக்கப்பட்ட வன்செயல்களின் சில கட்டமைக்கப்பட்ட மூலங்கள் தொடர்பான இந்த ஆய்வின் விளைவாக சமாதானத்தை உருவாக்குவோர் எதிர்நோக்கும் சவால்கள் அவற்றை தீர்ப்பதற்கு அவர்களுக்குத் தற்போதுள்ள திறனைவிட மேலோங்கியுள்ளது தெரியவருகின்றது. சமாதானத்தை உருவாக்குவோர் முடிந்தபோதெல்லாம் தமது வளங்களின் உச்ச அதிகரிப்புக்காக உயர் மட்டத் தொடர்புகள், கூட்டுறவு, ஒத்த எண்ணம் கொண்ட அரச, அரசாங்கத்திடை, அரச சார்பற்ற துறைகளிலுள்ள செயற்பாட்டாளர்களுடன் நல்ல தொழில் உறவுகளை நாடவேண்டுமென்பதே இதன் கருத்தாகும்.

இக் கலந்துரையாடலின் நோக்கங்களின் பொருட்டு தடம் II முனைப்புகளுக்கும், மோதுகைகளின் சில கடினமான அரசியல் பொருளாதார இயக்க ஆற்றல்களுக்கு முகம் கொடுக்கம் வகையில் அவை எவ்வாறு தடம் 1 தடம் 11/2 முன் முனைப்புகளை ஊக்குவிக்கக்கூடும் என்பதற்கும் பிரதான கவனம் செலுத்தப்படும்.

உதாரணமாக அசாநி மோதுகைத் தீர்வு, சமாதான உருவாக்கல் துறை விரிவடைந்து, தொழில்துறை சார்ந்ததாகி, நீண்டகால மோதுகை மாற்றுநிலையாக்கச் செயல்முறைகளுக்கு கூடுதலாக வளங்களைப் பெற்று வருகின்றது. எவ்வாறாயினும், அது வடக்கில் மேலோங்கியதாக இருக்கும், அதன் வளங்கள் உலக இராணுவ, ஆயுதம் தாங்கிய அரசசார்பற்ற செயற்பாட்டாளர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறியதாகும். அத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட வன்செயல்களில் அரசியல், பொருளாதார சவால்களை சமாளிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட திறனையே கொண்டிருக்கும். அரசியலை குற்றவியல்மயப்படுத்தல், தோல்வியடைந்த அரசுகள், சூறையாடும் அரசுகள், நிறுவனமயப்படுத்தப்பட்ட ஊழல், சட்டவாட்சியின் பரந்த அளவிலான வீழ்ச்சி ஆகியவற்றைக் கையாளுவதில் நிச்சயமாக சிக்கல்களை எதிர் நோக்கும். இத்துறையானது பலவந்தம் மூலம் இணக்கப்பேச்சில் ஈடுபடமுடியாததுடன், பிரச்சினைகளுக்கு தீர்வினை வலிந்து செயற்படுத்தவும் முடியாது. அதன் வலு பிற பரப்புகளிலேயே தங்கியுள்ளது. அரசியல்ரீதியாக கட்டுப்படுத்தப்படாமல், மனித துயரங்களுக்கு பதிலிறுக்கக் கூடிய திறனும், நெகிழ்வுத்தன்மையும் அதற்கு உண்டு.

வன்செயல்களின் மாற்றுநிலையாக்கம் தொடர்பாகவும், நியாயமான சமாதானத்தை மேம்படுத்தும் பொருட்டும் மோதுகை வலயங்களிலுள்ள உள்;ர் மக்களுடன் பங்காண்மையை உருவாக்கி, உடனடியான துயருக்கு ஆறுதலளிக்கமுடியும். அதேவேளை, மோதுகைகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுடன் அவர்களது வேறுபாடுகளை எவ்வாறு தீர்க்கலாம், எவ்வாறு அவர்களது பிரச்சினையை தீர்த்து மனித தேவைகளைத் திருப்திப்படுத்தலாம் என்பது தொடர்பான கலந்துரையாடல்களையும், உரையாடல்களையும் ஊக்குவிக்கலாம். பொருளாதார அபிவிருத்தி, மனித பாதுகாப்பு, மேம்பாடு தொடர்பாக கொடையாளிகளினதும், பல்தரப்பு அமைப்புகளினதும் பாரிய கொள்கைத்தீர்மானங்களில் செல்வாக்கை செலத்துவதற்கு அதன் நுண்ணறிவை பயன்படுத்தலாம். சில வேளைகளில் அசாநி யின் பங்கு ஊக்குவிப்பதாகவும், மோதுகைத் தரப்பினரிடையே தொடர்புகளுக்கு வசதி செய்பவையாகவும் இருக்கின்றது. மற்றும் சில வேளைகளில் அதன் பங்கு கூடுதலாக ஆய்வுபூர்வமானதாகவும், செயல்முறைகள் மிகவும் ஆழ்ந்தாராய்வனவாகவும் (உ-மாக ஊடாட்டச் செயல்முறை பிரச்சினை தீர்க்கும் செயலமர்வுகளில் போல) உள்ளன. இவ்வனைத்து நடவடிக்கைகளினதும் அடிப்படை நோக்கம் எவ்வாறாயினும் ஒன்றாகவே இருக்கும். மனித வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் வலுவான நிலைமைக்குத்தக்கபடி வளைந்து கொடுக்கக்கூடிய சமுதாயமே அடிப்படையான முற்தேவையாகும் என்ற ஊகத்தில் அநேகமான மோதுகை மாற்றுநிலையாக்க அசாநி க்களும், கல்வியாளர்களும் சமூகத்தை பிளவுபடச் செய்பவர்களின் செயல்களைவிட இணைக்க முயலுவோரின் செயல்களையே கட்டியெழுப்ப முயல்வர்.

எவ்வாறாயினும், முற்போக்கு வாதங்களிலிருந்து முயற்சிமிக்க, சகிப்புத்தன்மைகொண்ட சமுதாயம் தேவையானதாக இருப்பினும் அது மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கும், நியாயமான சமாதானத்துக்கும் போதுமான நிபந்தனையல்ல என்பது தெளிவாகின்றது. அவற்றின் பரந்துபட்ட, சிதறுண்ட இயல்பினால் சமுதாயங்களுக்கு, ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதார, அரசியல் அதிகாரத்தின் மீதான பயனுறுதிமிக்க அல்லது நீடித்திருக்கும் விமர்சனத்தைக் கட்டியெழுப்புவதில் சிரமம் உண்டு. எவ்வாறாயினும், பொருளாதார, அரசியல் அதிகாரம் ஒழுங்கின்றி இருக்கும் அப்பிரதேசங்களில் சிறிய சமுதாய அமைப்புகள் மிகவும் பயனுறுதிமிக்கதாக இருக்கும்.

மனிதாபிமான அசாநி க்கள் நல்லநோக்குடைய பொதுநல பேரார்வங்களை எய்தப்பெறுவதற்கு பிற உத்தியோகபூர்வ, உத்தியோக பூர்வமற்ற தடங்களுடன் திட்டமிட்ட தெளிவான தொடர்புடைய ஒத்திசைவான

உத்திகளை கொண்டிருப்பது அவசியம். மோதுகை வலயங்களில் வன்முறையான மோதுகைகளைக் கையாளுவதற்கும், நீதியான, நீடித்திருக்கக்கூடிய சமாதானத்தை மேம்படுத்தும்பொருட்டு பயனுறுதிமிக்க வழிகளை நாடும் அனைவருக்கும் சவாலாக இருப்பது ஆய்வுகளைப் பங்கிடுதலும், சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டாளர்கள் அனைவரிடையிலும். உயர் மட்ட இணைவை நாடுவதுமே ஆகும்.

சிறந்த, ஆய்வுபூர்வமான, பயனுறுதிமிக்க சமாதானத்தை உருவாக்கும் செயல்முறைகளை அபிவிருத்திசெய்யும் பொருட்டு அபிவிருத்தித்துறை மோதுகை மாற்றுநிலையாக்கச் சமுதாயத்தினரிடையே அடிப்படையான, தீர்க்கமான உரையாடல்கள் நிகழ்வது முற்றிலும் அவசியமானதாகும். தனியாகச் செயற்பட்டு இருவரில் ஒருவரால் நிலையான, நீடித்திருக்கக் கூடிய சமாதானத்தை அளிக்கமுடியாது. அத்துடன் ஒருவர் மற்றவரது அக்கறைகளை குறைத்துக்காட்டுவதால் அவர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை இருவராலும் தீர்த்துக்கொள்ள முடியாது. வேறுவிதமாகச் சொல்வதாயின், மோதுகை மாற்றுநிலையாக்கப் பணிகளுக்கு அபிவிருத்தி அல்லது நியாயமான பரிமாணத்தைச் சேர்ப்பது அல்லது அபிவிருத்தி, மற்றும் நியாயமான பணிகளுக்கு மோதுகை மாற்றுநிலையாக்கக் கண்ணோட்டத்தை அளிப்பது என்பது மட்டுமே கேள்விக்குரியதல்ல ஆயினும் அபிவிருத்தி அத்தோடு மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாட்டாளர்கள் இரு கண்ணோட்டங்களினதும் ஒப்பீட்டு ஆய்வுமுறையான செயல்முறை அனுகூலங்களையும், ஒவ்வொருவரினதும் கோட்பாட்டியலான அத்துடன் செயல்முறையான பங்களிப்புகளை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதையும் அடையாளங் காணும்பொருட்டு ஒருவருடன் ஒருவர் அமர்ந்து உரையாடுதல்வேண்டும். இது மேலும் அறிவார்ந்த, சாதுர்யமான பங்களிப்பினூடாக தனிப்பட்ட நபர்கள், சமூக அரசியல் மாற்றங்கள், கட்டமைப்பு உறுதிப்பாடு, நிலையான சமாதானத்தின் பொருட்டு பணியாற்றும் அமைப்புகள், இயக்கங்களுக்கு உதவும்.



மோதுகை மாற்றநிலையாக்கம் செய்வோர், அபிவிருத்தி நிபுணர்கள் ஆகியோர் கட்டமைக்கப்பட்ட வன்செயலுக்கும், அநீதிக்கும் சவால்விடுக்கும் முறைவழிகளை ஊக்குவிக்க உதவும் அதேவேளை வன்முறையான தொடர்புகளை மாற்றும் கடின பணியில் ஈடுபட்டுள்ளனர். சவாலானது, வன்முறையான தொடர்புகளில் மாற்றுநிலையாக்கம் செய்யக்கூடியவகையில் குடிமக்களுக்கும்,சமூகங்களுக்கும் வலுவளிப்பதைவிடக் குறைந்தது எதுவும் அல்ல. அதேவேளை, எதிர்காலத்தில் வன்முறைகளை குறைப்பதற்கும் இச்செயல்முறைகள் காலம் பூராவும் மேற்கொள்ளப்படுவதற்கு உத்தரவாதமளிக்கும் பொருட்டும் பொருளாதார, அரசியல், சமூக நிறுவனங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதை (அல்லது அவர்கள் தமது நோக்கங்களை எய்த இயலாதிருப்பின் மாற்றப்படுவதை) உறுதி செய்வது அவசியமாகும்.

இதனைப் பயனுறுதியுடன் செய்யுமுகமாக, அபிவிருத்தி மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்க நிபுணர்களிடையே நவீன தந்தைவழி மரபு அல்லது கட்சிக்காரர் அரசியல் வலையமைப்புக்கள் (சிலருக்கு அனுகூலமாகவும் மற்றும் சிலருக்கு பிரதிகூலமாகவும் இருக்கும்) போன்ற எதிரான பொருளாதார செயல்முறைகளுக்கு எந்த வழிகளில் சவால் விடுக்கலாம் அல்லது மாற்றலாம் என அறிந்துகொள்ளுமுகமாக தீவிரமான கலந்துரையாடல்கள் நடத்தப்படுவது அவசியம். இந்தத் திரிபுற்ற பொருளாதாரச் செயல்முறைகள் தீய சமூக, அரசியல் விளைவுகளை உருவாக்குவதன்மூலம் நிலைகுலைவை அதிகரித்துள்ளது. இதன்விளைவாக அதிகாரத்திலுள்ளவர்கள் வன்செயல்களால் அல்லது ஓரைக் குழுக்களை வன்செயல்களை புரிவதற்கு வற்புறுத்துவதன்மூலம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லாத பதவிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள முயல்கின்றனர். அநேகமான மோதுகை மாற்றுநிலையாக்கச் செயற்பாடுகளில் இதற்கு மிகக் குறைந்த கவனமே செலுத்தப்படுகின்றது.

எவ்வாறாயினும், அத்தகைய உரையாடல்களுக்கு வசதிசெய்து கொடுக்குமுகமாக அபிவிருத்தி, மோதுகைத் தீர்வு நிபுணர்களிடையே உயர் மட்டக் கூட்டிணைப்பு தேவைப்படும். அத்தகைய பிரச்சினைகளை உலக வங்கி அல்லது இருதரப்பு கொடையாளிகளுக்கு விட்டுவிடாமல் சிவில் சமூகத்தில்

அக்கறையுள்ளவர்களையும் கூட்டிணைப்பது மிகவும் முக்கியம். ஏனெனில், அரிதாக உள்ள தேசிய வளங்களை பகிர்வதில் எவரைச் சேர்த்துக் கொள்வது, எவரை விலக்கிவிடுவது என்று தீர்மானிப்பதில் இது உதவும். வன்முறைகளை நிறுத்துவதை மட்டுமல்லாது, நியாயமான, நீடித்திருக்கும் சமாதானத்தை நாடுவோருக்கு இந்த விடயங்களை அவற்றைப்பற்றி நன்கு கலந்துபேசி உரையாடக்கூடிய முறையில் எவ்வாறு நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வது என்பது பிரதான சவாலாக இருக்கும்.

வன்செயல்களைக் கைவிடுவதற்கு அச்சத்தைக் குறைப்பது, நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவது ஆகிய அனைத்தும் முக்கியமாக இருப்பினும், அவை போதுமானதல்ல. இதற்கு வேறுவிதமான அரசியல் முறையில் தடம் II மோதுகைத் தீர்வு செயல்முறையில் தீவிரமான அரசியலாக்கம் தேவை. இது அரசியலில் குறைந்த எதிர்ப்புள்ள அரசியலின் பிரச்சினை தீர்க்கும் செயல்முறையினை வற்புறுத்துகின்றது. அதனை அனைவரது நலனையும் மையமாகக் கொண்ட, போட்டித் தன்மைக்கு மாறாக, கூட்டிணைவான, எதிர்ப்புக்களுக்கு மாறாக நிபந்தனையற்றவகையில் ஆக்கபூர்வமான அரசியல் செயல்முறையை வடிவமைப்பதுடன் ஆரம்பிக்கமுடியும். இது நடைமுறைக்கொவ்வாத கற்பனையாகத் தோற்றக்கூடும். இருப்பினும், இதுவே பாரிய அபிவிருத்தி கொடையாளிகள் பிரதானமாக நகர்ந்து கொண்டிருக்கும் திசையாகும்.

**பெட்டி 2 : புருண்டியில் சர்வதேச விழிப்புநிலை நிகழ்ச்சித் திட்டம் (IA) ஒரு விடய ஆய்வு**

IA ஆனது பல்வேறு வன்முறை மோதுகை வலயங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்துள்ளது: கோகசஸ், கிரேட் லேக்ஸ், மேற்கு ஆபிரிக்கா, இலங்கை, கொலம்பியா. இந்த இடங்கள் அனைத்திலும் உள்;ர் மக்கள் தமது சொந்த மோதுகைகளுக்குத் தாமே முகம் கொடுப்பதற்கு வகை செய்வதையும், ஊக்குவிப்பதையும் அவர்கள் இந்தப் பிரச்சினைகளுக்குத் தமது சொந்தத் தீர்வை உருவாக்கும்போது அவர்களுக்குப் பக்கத் துணையாக இருப்பதையுமே தமது பிரதான பங்காக IA கருதுகின்றது.

உதாரணமாக புருண்டி IA நடவடிக்கைகள் மிகவும் விரிவாக உள்ள ஒரு பிரதேசமாகும். பதவியினர், பல அரசியல், இராணுவ தலைவர்களுடன் கடந்த பல வருடங்களில் அதீத பீதி மற்றும் சுய-பாதுகாப்புணர்வு மட்டத்தைக் குறைத்து பிரதான ஹூட்டு, டுட்சி கட்சித் தலைவர்களிடையே நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவக் கூடியதாயிருந்த பல தொடர் சொல்லாடல் செயல்முறைகளில் பணியாற்றியுள்ளனர். அத்துடன் அவர்கள் வேறுபட்ட பெண்கள் குழுக்களிடையிலும், கத்தோலிக்க திருச்சபையிலும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் பல நிகழ்ச்சித் திட்டங்களை விருத்திசெய்துள்ளனர். சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் மனித உரிமைகள் அமைச்சுடனும் பணியாற்றப்பட்டுள்ளது. புருண்டியில் நீதி, கல்வி முறைமைகளின் ஆய்வு நிறுவன ஒழுங்குகள் பாகுபாடு காட்டுவதாகவும், இனப்பிரிவினரிடையே துயரங்களை நீடிக்கச் செய்பவையாகவும் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றது. மிகவும் ஆழமாகப் பிரிவுற்ற சமுதாயங்களிடையே ஆக்கபூர்வமான பாலங்களை உருவாக்கும்பொருட்டு இந்நடவடிக்கைகள் அனைத்தும் பிரபலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

1995 இலிருந்து கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையூட்டும் தொடர்புகளும், பதவியினர் தமது பங்காளிகளிடம் மிகவும் நுணுக்கமான சில விடயங்கள் குறித்து

ஆய்வுபூர்வமான முக்கியமான கேள்விகளை எழுப்புவதற்கு இடமளித்துள்ளன. இராணுவ, படைக்கலந்தாங்கிய காவல்துறைப் பிரிவுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, இரு அமைப்புகளிலும் ஹூட்டு பிரதிநிதிகள் இல்லாமை, அத்துடன் தொழில்வாய்ப்பு, பாடசாலை வாய்ப்பு, அரச அதிகாரத்திலிருந்து வரும் நலன்கள் ஆகியவற்றில் சமமின்மை போன்றவை தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டன. மொத்தத்தில், எவ்வாறாயினும் சொல்லாடல் செயல்முறைகளையோ சிவில் சமூக திறனபிவிருத்தியையோ, இனங்காணுவதற்கான ஒழுங்கான முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை. பட்ரிக் கவ்னி (2000) கூறுகின்றவாறு "இனத்துவத்தினதும், நவீனத்துவத்தினதும் பொருளாதாரமும் புருண்டியிலுள்ள வேறுபட்ட இனக்குழுக்கள் நவின பொருளாதாரத்திலும், உலக சந்தை முறைமையிலும் இணைத்துக் கொள்ளப்பட்ட/ உள்ளடக்கப்படாத பல்வேறு வழிகளும் உள்ளன". இதிலிருந்து புலனாவது என்னவெனில் இனப் பிரிவினரிடையே பணியாற்றும் தொடர்பினை மீளக்கட்டியெழுப்புவதற்கு பெருமுயற்சி எடுக்கப்பட்டபோதும் அடிப்படையான பொருளாதார இடைவெளி மற்றும் பிளவுகளின் மூலங்கள் மிகவும் நேரற்றவகையில் கையாளப்பட்டுள்ளன.

தொழிலாளர் தொகுதியின் செறிவு, கோப்பியில் பொருளாதாரரீதியாக தங்கியிருத்தல், கிராமிய / நகர துறைகளுக்கு பொருளாதார ஒதுக்கீடுகள்போன்ற குறிப்பான விடயங்கள்தொடர்பாக சில கலந்துரையாடல்களே நிகழ்ந்துள்ளன. புஜூம்புரவிலும் அதனை மிக அண்மித்து சூழ்ந்துள்ள பகுதிகளிலும் தேசத்தின் மொத்த முதலீட்டில் 50 சதவீதம் உண்டு. இது அரசியல் / இராணுவ மேல் மட்டத்தினரின் வீடாக இருக்கும் -புரூரிக்கு ஒதுக்கப்பட்ட 16 சதவீதத்துடன் இணையும் போது நாட்டின் மொத்த முதலீட்டின் மூன்றிலொரு பங்கு மட்டுமே சனத்தொகையின் முக்கால் பங்குக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ளது (அதேமூலம்). அரசியல் பொருளாதாரம் தொடர்பான சொல்லாடல் ஹூட்டு/டுட்சி இனப்பிரிவுக்கு பாலங்கட்டுவதில் கவனம் செலுத்துவதைவிட, அல்லது UPRONA தேசீய முன்னேற்றச் சங்கம் FRODEBU புருண்டியில் ஜனநாயகத்துக்கான முன்னனி அரசியல் குழுக்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மீது கவனம்செலுத்தும் சொல்லாடல்களைவிட வேறு வகையான கலந்துரையாடல்களையே பிறப்பிக்கும். அவை நிச்சயமாக கலகக்காரர்களை சமாதானப் பேச்சுவார்த்தையில் இணைத்துக்கொள்ளக்கூடிய வழிகள் தொடர்பான கலந்துரையாடல்களைவிட வேறுபட்டதாக இருக்கும். இவை அனைத்துக்குமே சமாதான வேட்கை இருப்பினும், இறுதியில் நியாயமான, நீடித்திருக்க கூடிய சமாதானத்தை அபிவிருத்திசெய்யும் செயல்முறையில் சில மற்றையதைவிட முக்கியத்துவம் கூடியதாக இருக்கக்கூடும்.

சுவடு 1 செயற்பாட்டாளர்கள் (அரசியல்வாதிகள் இராஜதந்திரிகள், பிரதேச, உலகளாவிய அமைப்புகள், பல்தரப்பு நிதி நிறுவனங்கள்) அனைவரும் வன்முறைகள் நிகழ்ந்தவுடன் அதனை சமாளிப்பதைவிடுத்து வன்முறையான மோதுகைகளைத் தடுப்பது தொடர்பான வேலைகளுக்கு தமது பெருமளவு வளங்களை செலவிடுவதிலேயே கவனம்செலுத்தினர். வன்முறையான மோதுகைகள்மீதான பல்வேறு அபிவிருத்தி இடையீடுகளின் சாதக பாதக தாக்கங்கள் தொடர்பாக கொள்கை உருவாக்குவோரில் ஆழ்ந்த சிந்தனை உண்டு. இது மிகவும் வலுவான மோதுகைத் தடுப்புக்கான அவா, சமாதானத்தைக் கட்டியெழுப்பும் உத்திகள் அத்துடன் மோதுகைக் கூருணர்வுள்ள அபிவிருத்திக்கு வசதிசெய்துகொடுக்கும் முறைமையான கருவிகளுடன் இணைகின்றது (கைகால்ஸ், லியோனார்ட் 2001ஐப் பார்க்க). மோதுகைத் தடுப்பு உண்மையாகவே அரசியல், அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களிலின் மையத்தில் இருக்கின்றது.

அபிவிருத்தி செய்யப்படவேண்டியிருப்பது கூடுதலான அரசியல் ஈடுபாடும், மோதுகைக் கூருணர்வுள்ள அபிவிருத்தி உத்திகளை ஒருமுகப்படுத்துவதும் அத்துடன் மிகவும் முக்கியமாக, பேரியல்பு கொள்கைகளையும், சிற்றியல்பு நிகழ்ச்சித்திட்டங்களையும், செய்திட்டக் கட்டுக்கோப்புகளில் செயற்படுத்துவதற்கான அங்கீகாரமுமே ஆகும். சரியான நிகழ்ச்சித்திட்டத் தேவைகளாக எவை அமைகின்றன மற்றும் வன்முறையான மோதுகைகளில் அனைத்து கட்டங்களிலும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை என்று பல கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்றுவருகின்றன. அத்துடன், குறிப்பிட்ட பங்குகள், பொறுப்புகள், சுமைகளை பகிர்ந்துகொள்ளல், அபிவிருத்தி முகவராண்மைகளிடையே அடிப்படை செயற்பாட்டுக் கூட்டிணைப்பு தொடர்பாகவும் நிச்சயமாக பல கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. இக் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதே நம்பிக்கையூட்டும் அறிகுறியாகும். அத்துடன் வன்முறையான மோதுகை வலயங்களின் இருதரப்பு, பிராந்திய, பல் தரப்பு அபிவிருத்திகளைத் திட்டமிடுதல், நிதியளித்தல் செயற்படுத்துகையில் சமாதானம், ஸ்திரநிலை, மனிதப் பாதுகாப்பு ஆகியவை முக்கிய இடத்தைப் பெறவேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பல பல்தரப்பு அபிவிருத்தி முனைப்புகள் தமது இணக்கப்பேச்சுக்களில் பொருளாதாரப் பிரச்சினைக்கு முக்கிய இடம் அளிக்கின்றபோதும் (உதாரணமாக உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள், நிபந்தனையுடன் கூடிய உதவி) சிவில் சமூகத்தின் பல மோதுகைத் தீர்வு முனைப்புகளில் இவை வழமையாகக் காணப்படுவதில்லை. சுவடு I செயற்பாட்டாளர்களுக்கு (சுவடு II, தனியார்துறை செயற்பாட்டாளர்களைப் போலவே) இன்னமும் பிரச்சினையாக இருப்பது மேலும் கடினமான அரசியல் கேள்விகளை எழுப்புவதற்குப் பொருத்தமான வழிமுறைகளே ஆகும்.

பிற அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலிருக்கும் தத்துவம் உத்தியோகபூர்வ மட்ட இணக்கச்பேச்சாளர்கள் அடிக்கடி உண்மைநிலைப்படியான அல்லது சட்டப்படியான கட்சிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள ஆட்புலங்களில் தமது அதிகாரத்தை பயனுறுதியுடன் பிரயோகிக்கக் கூடியவர்களாக உள்ளனரா இல்லையா என்ற தமது பல ஐயப்பாடுகளைப் புறக்கணிக்கவேண்டும் என்பதையே அர்த்தப்படுத்துகிறது. நிச்சயமாக அவர்கள் மனித பாதுகாப்பு, ஊழல், நலிந்த அல்லது பயனுறுதியற்ற ஆளுமை தொடர்பான அரசினால் விடுக்கப்படும் சவால்கள் குறித்த அக்கறைகளை மறைக்கவேண்டியவர்களாக உள்ளனர். இராஜதந்திர பிரதிநிதித்துவத்தினூடாக தேசிய மேல்மட்டத்தினர் மோதுகைகளை அதிகரிக்கின்றார்களா அல்லது அதனைக் கட்டுப்படுத்தி அதற்கேற்ப பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களா என அவர்களால் நுணுக்கமாக உறுதிசெய்துகொள்ளமுடியும். அவர்களால் ஐ.நா. அரசியல் விவகார திணைக்களத்திடம் (UNDPA) தமது அக்கறைகளை வெளிப்படுத்த முடியும், அல்லது மனிதாபிமான உதவி கூட்டிணைப்பு அலுவலகத்துடன் (OCHA) மனிதாபிமான அக்கறையை

வெளிப்படுத்த முடியும். நிலைமை கடுமையாக இருப்பின் உலக வங்கி மற்றும் IMF உடன் ஊழல், சட்டவிரோத வர்த்தக பிரச்சினைகள் தொடர்பாக புதிய நிபந்தனைகளைப்பற்றிச் சிந்திக்குமாறு கூறலாம். இவ்வுத்தியிலுள்ள பிரச்சினை என்னவெனில் வங்கியும், நிதியமும் சமாந்தரமான அல்லது செங்குத்தான ஒப்புரவைப் பார்க்கிலும் செயற்திறனிலேயே கூடுதல் அக்கறை செலுத்துவதேயாகும். நவ்ஸீஜெரும் பிறரும் (2000) வாதிடுவது போன்று இவையே பல யுத்த வலயங்களில் வன்முறையான மோதுகைகளுக்கு மூலமாக இருப்பதுடன் இதனை நிகழ்ச்சி நிரலில் இடுவது பிற செயற்பாட்டாளர்களின் பொறுப்பாகும்.

சர்வதேச அரசியலின் உண்மைகள் அரச செயற்பாட்டாளர்கள் இத்துறையில் ஒருதரப்பு முனைப்புகளை எடுப்பதை கடினமாக்குகின்றது. அத்துடன் ஒத்த எண்ணங்களையுடைய நாடுகளின் பரந்த கூட்டிணைவை ஏற்படுத்துவதற்கும், அதன் பின்னர் கூட்டு அரசியல் சிந்தனையை

நிலைப்படுத்துவதற்கும் ஆகும் சந்தர்ப்ப ஆகுசெலவு மிகவும் அதிகமாகும். அதாவது கேட்கப்படவேண்டிய கேள்விகள் கேட்கப்படாமலே இருப்பதுடன் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எடுக்கப்படாதிருக்கும். வரக்கூடிய மோதுகையின் முதல் அறிகுறிகளில் இது நிச்சயமாக அவ்வாறேயுள்ளது. சர்வதேச சமுதாயம் மோதுகைகளின் சிக்கலான கட்டங்களுக்குப் பதிலளிப்பதற்கான வழிவகைகளை இன்னமும் கண்டுகொள்ளவில்லை. அது கண்காணிப்பதில் கணிசமான அளவு சிறந்ததெனினும், எதிர்விளைவு காட்டுவதில் அவ்வளவு சிறந்ததல்ல. மோதுகைக்குப் பிந்திய காலகட்டத்தில் தன்னை நிலைப்படுத்துவதில் குறிப்பாக அமைதிகாத்தல், சிவிலியன் பொலிஸ் அமர்த்தல், சுயாதீன நீதிமன்றங்களைத் தாபித்தல், ஆயுதங்களைக் களைதல் அத்துடன் படைக்கலைப்பு உத்திகளில் ஓரளவு சிறந்தது. இங்கும் கூட, எவ்வாறாயினும், வெவ்வேறு அரசியல் ஒழுங்குகளிலிருந்து எவர், எதனை, எப்போது, ஏன், எவ்வாறு பெற்றுக் கொள்வது என்ற கடினமான கேள்விகள் அநேகமாக உள்ளூர் மக்களிடமே விடப்படுகின்றன.

இது தனியார் துறையினர் முக்கியமான பங்களிப்பு நல்கக்கூடிய ஒரு விடயமாக இருக்கலாம். ஏனெனில், மொத்தத்தில் வர்த்தகம் செயற்பட விரும்புவது நிலையான வலயங்களிலேயன்றி, நிலையற்ற வலயங்களிலல்ல; ஊழலற்ற சூழலிலேயன்றி, ஊழல் நிறைந்த சூழலிலல்ல, அத்துடன் பொதுநலத்துக்கு தன்னை அர்ப்பணித்துள்ள திறமையான அரச முறைமையிலேயன்றி, பேராசைமிக்க திறமையற்ற சூழலிலல்ல. நிச்சயமாக, அரசாங்கங்களால் இக்கடினமாக அரசியல் கேள்விகளை நிகழ்ச்சி நிரலில் இடுவதற்கு இயலாதிருந்தால் தனியார் துறை, உள்ளூர், சர்வதேச அசாநி செயற்பாட்டாளர்களுக்கு இப்பிரச்சினைகளை சமுதாய, சிவில் மட்டத்தில் எவ்வாறு எழுப்பமுடியும் என வழிவகைகள் காணும் முயற்சியில் தடம் I ஆதரவு வழங்கப்பட வேண்டும். யுத்தத்தினால் பீடிக்கப்பட்ட சமூகங்களிலுள்ள அசாநி க்களுக்கு சுயாதீனமான, தைரியமான கொடையாளிகளினதும், அரசினதும் ஆதரவு அரசுகளின் இறைமை முழுநிறைக்காப்பின் குறுகிய விளக்கங்களை விலக்கிச் செல்வதற்கு முக்கியமான வழியாகும்.



அநேகமான யுத்தத்தினால் பீடிக்கப்பட்ட சமூகங்களில் பெரும் பிரச்சினையாக இருப்பது குறைபாடான அல்லது தோல்வியடைந்த அரசுகளில் வரைவிலக்கணப்படி இசைந்திணைகிற அல்லது பயனுறுதிமிக்க தலைவர்கள் அல்லது பயனுறுதிமிக்க சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வெளி இடையீட்டாளர்களின் துணிச்சலான செயல்களுக்குத் தரவளிக்கக் கூடிய வகையில் இல்லாமை ஆகும். மீண்டும் வாழ்தகவு பெறுவதை துரிதப்படுத்தும் பொருட்டு அத்தகைய சமூகங்களின் “பொறுப்பாண்மையை” ஐக்கிய நாடுகளினூடாக எடுப்பதற்கு சர்வதேச சமுதாயத்துக்கு முடியாது, அத்துடன் அது அவ்வாறு செய்வதற்கு விரும்பவுமில்லை. இவ்வாறாக அத்தகைய சூழலிலுள்ள அரசியல், சமுதாய தலைவர்கள் மோதுகைகளை அடக்கி வைப்பதில் சொந்த நலன்களை அபிவிருத்தி செய்வதுடன் வாடகை, சூறையாடல், அருகி வரும் தேசிய, பொருளாதார வளங்களின் சுரண்டல் போன்றவற்றிலிருந்து பெறக்கூடிய அளவு பொருளாதார, சமூக நலன்களைப் பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதிலிருந்து அறியப்படுவது யாதெனில், மோதுகை மாற்றுநிலையாக்கம் செய்வதற்கு முயல்வோர் பயனுறுதிமிக்க ஜனநாயக, ஊழலற்ற ஆளுமை தொடர்பாகவும், அத்தகைய செயல்முறைகள் நீடித்திருப்பதற்குத் தேவைப்படும் பொருளாதார முறைமைகள் பற்றியும், கலந்துரையாடல்களைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய வழிகள் பற்றியும் கூடுதலாக தெரிந்துகொள்ளவேண்டும என்பதாகும். பயனுறுதிமிக்க மோதுகை மாற்று நிலையாக்கத்துக்கும், நியாயமான சமாதானத்துக்கும் இது முன்னுரிமைப் பிரச்சினையாகும். இப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து அனைத்து பிரதான குழுக்களும் அரசியல் பொருளாதாரரீதியில் கிடையான சமமின்மையை வெகுவாகக் குறைக்கும் நோக்கில் செயற்படாவிட்டால் நிலையான, நீதியான சமாதானத்துக்கான வாய்ப்பு வெகு தொலைவிலிருக்கும். நவ்ஸீஜெரும் பிறரும்(2000 தொகுதி 2.20) பின்வருமாறு வாதிடுகிறார்கள்.

*தடுப்புக் கொள்கைகள் மோதுகைகளால் எளிதில் பாதிப்படையக்கூடிய அனைத்து நாடுகளிலும், பிரயோகிக்கப்படவேண்டும். இதில் தீவிர கிடையான சமமின்மையைக் காட்டும் நாடுகள் அனைத்தும், வருமானம் குறைந்த நாடுகள், எதிர்மறையான வளர்ச்சியுடைய நாடுகள், கடந்த கால் நூற்றாண்டுகளுக்குமேலாக தீவிரமான மோதுகைகள் நிலவும் நாடுகள் ஆகிய அனைத்து நாடுகளும் இதில் அடங்கும். தடுப்பு நடவடிக்கைகள் பிளவடையும் அரசுகள் அத்துடன் சட்டபூர்வமான விதத்தில் சமூகத்தை ஆள முடியாத அரசுகள் தொடர்பாகவும் அக்கறை செலுத்தவேண்டும்.*

எனவே, எதிர்காலத்துக்கான நிகழ்ச்சி நிரல் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. மோதுகைத்தீர்வு தொடர்பான பணியாளர்கள் அனைவரும் மோதுகை அரசியல் பொருளாதாரம் தொடர்பாக மேலும் கூடிய கூருணர்வு உள்ளவர்களாக இருக்கவேண்டியதுடன், அபிவிருத்தித்துறையும் அபிவிருத்தியின் மோதுகைக் கூருணர்வு இயல்பினைப் பற்றிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கு புதிய கண்ணோட்டமும், பழைய பிரச்சினைகளைப்பற்றிய புதிய சிந்தனை முறைகள், யுத்தத்தினால் பீடிக்கப்பட்ட சமூகங்களிலுள்ள கொடையாளிகள், பெறுநர்களிடையே உண்மையிலேயே அதிகாரமளிக்கும் விடுவிக்கப்பட்ட புதிய செயல்முறைகளை வடிவமைப்பது அவசியம். அபிவிருத்தி, மோதுகைத் தீர்வுத் துறையைச் சார்ந்த இரு சமுதாயங்களுமே இதனை உணர்ந்திருப்பது நல்லதொரு அறிகுறியாகும். மிகவும் அண்மிய எதிர்காலத்தில் யுத்தத்தினால் பீடிக்கப்பட்ட சமூகங்களிடையே பல்வேறு வகைப்பட்ட இடையீட்டு செயல்முறைகளை வடிவமைப்பதில் கோட்பாட்டியலான கண்ணோட்டம் இரண்டும் ஒருங்கிணைக்கப்படும் என்ற நியாயமான எதிர்பார்ப்பு உள்ளது.

## 4. கற்றுக்கொண்ட படிப்பினைகள்



இப் புதிய கண்ணோட்டங்கள் தொடர்பாக IA யும் பிறரும் கற்றுள்ள பாடங்கள் சில வருமாறு :

- முதலாவதாக, *ஒவ்வொரு மோதுகையினதும் குறிப்பிட்ட இயல்பையும், ஒப்பீட்டளவிலான அதன் தனித்துவத்தையும் ஏற்றுக் கொள்வது* மிகவும் முக்கியமானதாகும். உலகளாவியவை சில உண்டு குறிப்பாக காரணங்கள் தொடர்பில் உ-ம் கிடையான சமமின்மை, சூறையாடும் அரசுகள்-ஆனால் இவை தீர்வுகள் தொடர்பாக குறிப்பானவைபோல் முக்கியத்துவம் வாயந்தவையல்ல. இதனால் பொருள்படுவது என்னவெனில் மோதுகைத் தீர்வு நிபுணர்களால் செய்யப்படக்கூடிய முக்கியமான பணி முரண்பாடுகள் எழுவதற்கான காரணம், மோதும் தரப்பினர், அதனைத் தீர்ப்பதிலுள்ள தடைகள் ஆகியவைபற்றி தேவைக்கும் அதிகமான ஆய்வினை வழங்குவதேயாகும். மோதுகை தொடர்பான மிகச்சிறந்த ஆய்வினை இயன்ற வரையிலான அனைத்து கண்ணோட்டங்களிலும் உள்ளிருந்து, வெளியிலிருந்து, அடி, நுனியிலிருந்து மத்திய, சமூக பொளாதார அத்துடன் அரசியல் கண்ணோட்டங்களில் பார்க்கவேண்டும். இதனால் அறியப்படுவது எமது ஆய்வினை பிரதானமாக சூழமைவுக்குட்படுத்துவதேயாகும். இது இல்லாமல் பிற ஈடுபாடுகள் அனைத்தும் குறைபாடுடையதாகும். IA இன் எட் காசியா என்பவர் “சூழமைவு அற்ற உரைசாக்குக்கூறும் உரை” என்று கூறுவதில் விருப்பமுள்ளவராவார். மோதுகைகளை சூழமைவுறுத்தும்பொருட்டுமோதுகைத் தீர்வுப்பணியாளர்கள் எங்கிருந்து வருகின்றார்கள், அவர்களது நோக்கங்கள் கௌரவமானதா என மோதும் தரப்பினர் தெரிந்து கொள்ளக்கூடியவகையில் அடிப்படைக் கட்டுக்கோப்பு அல்லது நடத்தைக் கோவை ஒன்று தேவை. அத்துடன் இடையீட்டாளர்கள், தாம் கற்றவையும், கேட்டவையும் எதிராளிகள் பிரச்சினையைப் புரிந்துகொள்ள உதவக்கூடியவகையில் இருப்பதற்கும், உதவா மனப்பான்மை, எதிர்மறையான நடத்தைகள் கட்டமைப்புகளை மாற்றியமைக்கும் பொருட்டும் முதலில் முக்கியமாக கற்போராய் இருத்தல் வேண்டும்.

- இரண்டாவதாக, மோதுகைகளின் *பல்துறைச்சீல, பல்மட்ட ஆய்வினைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம்.* அரச முறைமைகளுக்கு எதிராக, சிவில் சமூக அமைப்புகள் சார்பாக ஒருபுறச் சார்பாக இருப்பது நாகரீகமானதெனினும், உண்மையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறையில் அரசமுறைமைகள் முற்றிலும் அவசியமானவை. அத்துடன் அவற்றை ஆராய்ந்து பயன்படுத்தவேண்டும். அரச முறைமையினால் மட்டுமே சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது, சிவில் சமூகங்களினால் மட்டுமே சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இரு துறையினதும் பங்களிப்புடனேயே நீடித்திருக்கும் தொந்தரவான மோதுகைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

- *மூன்றாவதாக, வேறுபட்ட அரசியல் தொகுதிகள் இடையேயும், உள்ளேயும் இருக்கும் தொடர்புகளையும்* அத்துடன் அரசு, சிவில் சமூகம், முறைமைசார், முறைமைசாரா பொருளாதார துறைகள், குற்றவியல்சார் குற்றவியல்சாராக் குழுக்கள், துணை இராணுவம், பொலிஸ், இராணுவ மூலகங்கள் ஆகியவற்றுக்கிடையே பின்னப்பட்டிருக்கும் தொடர்புகள் பற்றியும் புரிந்துகொள்வது அவசியம். குறிப்பாக நடவடிக்கைகளின் நுண்ணியல்பு பேரியல்பு மட்டங்களுக்கு இடையே உள்ள தொடர்புகளையும், இவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன என்றும் புரிந்து கொள்வது அவசியம். உதாரணமாக நடவடிக்கையின் நுண்ணியல்புமட்டத்தின் அடிமட்டத்தில் நிகழ்பவைகளுடன் தொடர்பற்ற உயர்மட்ட பேரியல்பு மட்டத்துடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதில் பலனில்லை.

- நான்காவதாக, *யுத்தத்தின் அரசியல் பொருளாதாரம், வன்செயல்கள் தொடர்பாக மேலும் நியாயமான ஆய்வு ஒன்றினை நாம் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியம்.* குறிப்பாக, யுத்தத்தில் ஈடுபடுவோருக்கு கிடைக்கும் ஊக்குவிப்பு முறைமைகள் அல்லது செயல் தூண்டல்கள் குறித்தும், யுத்தத்தினால்பாதிக்கப்பட்டோர் அதற்குத் தாக்குப்பிடிக்கும் முறைகுறித்தும் கூடுதலாக அறிந்திருப்பது அவசியம். இவை என்னவென்றோ, யுத்தத்தினால் நலன் பெறுவோர் யார், இழப்பவர் யார் என்றோ நாம் அறிந்திராவிடில் எம்மால் ஓர் அரசியல் ஒப்பந்தத்தைப் பெறமுடியும், ஆனால் நிலையான, நீடித்த சமாதானத்தைப் பெறமுடியாது. குறிப்பாக, உறுதியற்ற நிலை காரணமாகப் பெருகும் ஊக்குவிப்பு உறுதிப்பாட்டினால் கிடைக்கும் ஊக்குவிப்புகளை விடக் கூடுதலாக இருக்கும்போது உதாரணமாக மேற்காபிரிக்காவில் இந்த ஆதரவுமூலம் சியாரா லியோனியன் பல மில்லியன் டொலர் வைர வர்த்தகம் கிட்டியது என்ற தெரிநிலையுடன் சார்ள்ஸ் டேய்லரை RUF க்கான ஆதரவைக் கைவிடும்படி தூண்டியது எது? ஜனாதிபதி டேய்லரின் அரசியல் இராணுவ நடத்தையை மாற்றுவதற்கு எவ்வளவு தூரம் UN பாதுகாப்புசபை லைபீரியாவுக்கு எதிரான தடைகள் அதிகரிப்பை அங்கீகரித்தது?



- ஐந்தாவதாக புள்ளிவிபரவியலை விட மோதுகை இயக்கவியலில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். மோதுகைகளை காலத்தினூடாக வடிவங்கள், பாங்குகள், கூட்டிணைவுகளை அடையாளங் கண்டு பின்தொடரவேண்டும். ஒருவர் முரண்பாட்டு சூழ்நிலையில் மூழ்கி இருக்கும்போது பல்வேறு நடவடிக்கைகள் எவ்வாறு மோதுகைகளை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ செய்கின்றன என்பதை அரிதாகவே அறிந்துகொள்ளமுடிவதால் மோதுகைகளின் இயக்க ஆற்றலைப் புரிந்து கொள்வது தரப்பினருக்கு உதவியாக இருக்கும். எவ்வாறு வெவ்வேறு இணக்க செயல்குறிப்புகள் முரண்பாடுகளில் நேரான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதைத் தெரிந்து கொள்வதில் சில வேளைகளில் அவர்கள் மகிழ்வடைகின்றனர்.

- ஆறாவதாக, மோதுகைகளின் எதிர்த் தாக்கங்கள் தொடர்பாக *பல்வேறு செயற்படுநர்களின் பங்குகளையும், பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வது அவசியம்.* துறையில் தெளிவான உழைப்பும், பங்கீட்டு உணர்வும் இருந்தாலன்றி, நிச்சயமான அனுபவங்களைப் பெறமுடியாது: யார் எதில் நிபுணத்துவம் பெறுவது, எவ்வாறு அவர்களை பணியில் கூட்டிணைக்க முடியும் என்பவற்றை அறியும் வகையில்

வெளிக்களத்தில் தெளிவான வேலைப்பிரிவினை இருத்தல் வேண்டும். உயர்மட்டக் குறைநிரப்பு தன்மையாவது உறுதிப்படுத்தப்படவேண்டும். ஆகக்கூடியது வெவ்வேறு நடவடிக்கைகளை தம்மை விட நிபுணத்துவம் கொண்ட பிற குழுக்களுக்கு எவ்வாறு மாற்றுவது என்பது மிகவும் முக்கியமாகும். இவ்விடயத்தில் உயர்மட்டக் கூட்டிணைப்பைப் பெறுவது கடினமாயினும், ஆகக்குறைந்தது போட்டிகள் தவிர்க்கப்படலாம். அத்துடன் ஈடுபாடு தூண்டப்படவேண்டும்

- ஏழாவதாக, *சமாதானத்தை கட்டியெழுப்புதலும், மோதுகைத் தீர்வுப்பணிகளும் நீதி, ஜனநாயகம் ஆகிய விடயங்களிலிருந்து இணைவறுக்கப்படலாகாது.* வற்புறுத்தல் முகவராண்மையை மையமாகக் கொண்டிராத சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்ற விசேட செயற்பாடு ஒன்று உருவாக்கப்படின், சமாதான உருவாக்கல் அரசியல் மயமற்றதாகி, வலுவிழந்துவிடும். இவ்வாறாக சிவில் சமூகத்தில் மட்டும் கவனம் செலுத்தும் பணியில் ஓரளவு ஐயப்பாட்டினை வைத்திருத்தல் முக்கியமாகும். ஏனெனில், சிவில் சமூகத்தினால் மட்டுமே சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்க முடியாது. அவ்வாறே அரசுகள், அரசியல் முறைமைகள், மேல்மட்டத்தினரால் மட்டுமே சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. எனவே அரச முறைமைகள், வன்மையான மனப்பாங்கு, நடத்தை சூழமைவுகளை மாற்றுவது தொடர்பாக சிவில் சமூக குழுக்களின் பங்கு மதிக்கப்படுவதை உறுதிசெய்துகொள்ளவேண்டும்.

- எட்டாவதாக, கடந்த சில ஆண்டுகளில் IA கற்றுக் கொண்ட பாடம் *பிற மக்களின் பிரச்சினைகளை வெளி அமைப்புக்கள் தீர்க்காது.* அவ்வாறு செய்வதாக அவர்கள் கூறினால் அது ஏமாற்றுவித்தையாகும். அவர்களால் செய்ய முடிந்தது எல்லாம் மோதுகையிலுள்ள உள்;ர் தரப்பினர் தமது மோதுகையின் மூலங்கள் பற்றியும், அதனை அவர்களாகவே தீர்த்துக் கொள்வதுபற்றியும் பேசுவதற்கு பாதுகாப்பான ஒரு அவகாச வாய்ப்பினை அல்லது ஏதாவது ஓர் இடத்தை அமைத்துக்கொடுப்பதே ஆகும். மோதுகை மாற்று நிலையாக்கப் பணிகளின் முக்கியமான தத்துவம் என்னவெனில் மோதுகைத் தரப்பினர்களே தமது சொந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். அதுபோலவே அக் குழுக்களின் மேல்மட்ட பிரதிநிதிகளால் தனியாக தீர்வுகளை வழங்கமுடியாது. அவர்கள் தமது தொகுதியினரை தம்மோடு கொண்டுவரவேண்டும். அதற்கு பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு முன்னர், முன்பு ஒருபோதும் செய்யப்பட்டிராதவாறு முன் கலந்தாலோசனைகளையும், கலந்தாய்வுகளையும் நடாத்தவேண்டும். உதாரணமாக ரிச்சர்ட் ஹொல்புருக் என்பவர் டேட்டனில் பலரைக்கூட்டி பொஸ்னியாவுக்கான சமாதான ஒப்பந்தம் ஒன்றை எய்தினார். இது இனக்கொலையை நிறுத்தியது. ஆனால் அது பால்கனிலிருந்த மோதுகையின் அடிப்படைக் காரணங்களைத் தீர்க்கவில்லை. மேலும் சிவில் சமூக மட்டத்திலிருந்த வெறுப்பை அது தீர்க்கவில்லை. வன்செயல்களின் அடிப்படை மூலங்களுக்கு முகம் கொடுக்கவில்லை. அத்துடன் முக்கியமாக பால்கனி இன்றும் காணப்படும் வரலாற்று துன்பங்களுக்கு கவனம் செலுத்தவில்லை.

- ஒன்பதாவதாக, வெளித்தரப்பினர் (NGO க்கள், INGO க்கள் அல்லது தனிப்பட்ட அரசுகளாயிருக் கலாம்) மோதுகைகளுக்கு கொண்டுவரக்கூடியவைபற்றி நிலை குறித்த <u>விகிதாசார தேவை</u> உள்ளது. வன்முறையற்ற மோதுகைத் தடுப்புக்கும், மாற்றுநிலயாக்கத்துக்கும் செலவிடப்படும் தொகை பெரியது. கிடைக்கக் கூடியதாக உள்ள, மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் அடிப்படையில் வெவ்வேறு இடங்களில் என்ன செய்யப்பட்டுள்ளது என்பதை மதிப்பிடுவது கடினம். எவ்வாறாயினும், சிறந்த வள முகாமைத்துவத்தின்மூலம் மேலும் அதிகமானவற்றைப் பெறமுடியும் என்பது தெளிவு. மேலும் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயம் எவ்வாறாயினும் 1970, 1980 களின் அபிவிருத்திபோன்று மோதுகைத்தீர்வும், சமாதானம் கட்டியெழுப்புதலும் நலன் ஓம்பலில் தங்கியிருக்கும் புதிய வாகனமாக மாறிவிடக்கூடாது.

- பத்தாவதாக, சொல்லப்பட்டவைகளில் அநேகமானவை தனிநபர்களும் அமைப்புக்களும் அதிகாரமளிக்கும், விடுதலையளிக்கும் பங்காண்மை நிறுவுவதில் காணும் சிக்கல்கள் பற்றி சுருங்கக் கூறின் இது செய்வதற்குக் கடினமான காரியம், ஆனால் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கியமானது. பயனுறுதிமிக்க இடையீட்டாளர்கள் யாார்? வெளி இடையீட்டாளர்கள் எப்படி நம்பிக்கையையும், கலாசார கூருணர்வையும் கட்டியெழுப்புகிறார்கள், வகை கூறுதலை மேம்படுத்துகிறார்கள், சுயாதிக்கத்தை மேம்படுத்துகிறார்கள் போன்ற வினாக்களாகும். கடினமான கேள்விகளைக் கேட்கக்கூடிய வகையிலும், பிரச்சினைமிக்க கட்டமைப்புக்களை மாற்றுநிலையாக்கக் கூடிய வகையிலும் எவ்வாறு அந்த இடையீட்டாளர்கள் உள்ளூர் பங்காளிகளுடன் உடன்செல்கிறார்கள்?
- பதினோராவதாக, நாம் செய்யும் அனைத்தும் *நீடித்திருப்பதை* நோக்காகக் கொண்டிருப்பது மிகவும் அவசியம். எமது வேலைகள் அனைத்தும் செயல்முறை வேலைகளாகும். இதற்கு காலத்தினாலேயே பதில் சொல்லமுடியும். இதனால் பொருள்படுவது என்னவெனில் நாம் மோதுகைத் தரப்பினரை மோதுகைக்கு முன்னரும், மோதுகையின் போதும், மோதுகையின் பின்னரும் நீண்ட பணிக்காக அர்ப்பணிப்புணர்வு கொள்ள வைக்கவேண்டும். நிரந்தர சமாதானம் எதுவுமில்லை. ஆனால் எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கையுடன் வன்செயல் பீதியற்றுச் சிந்திக்கக்கூடிய வகையில் தொடர் இணக்க ஒப்பந்தங்கள் அல்லது புரிந்துணர்வுகள் ஏற்படுவதே உண்மை ஆகும்.
- பன்னிரண்டாவதாகவும், இறுதியாகவும் இப்பணிகள் அனைத்தும் ஏதாவது சமூக *அரசியல் மாற்றக் கோட்பாட்டினுள் ஊறியதாக* இருத்தல் வேண்டும். விரும்பத்தக்க எதிர்காலம் குறித்து எமது தொலைநோக்கு என்ன? மோதுகைத் தரப்பினரின் தொலைநோக்கு என்ன? இவை இரண்டும் எங்கு சந்திக்கின்றன? எம்மால் ஏற்றுக்கொள்வதற்குக் கடினமாக இருக்கும், ஆனால் பிறருக்கு முக்கியமானதாக இருக்கக்கூடிய தொலைநோக்கு தொடர்பில் நாம் எவ்வளவு கூருணர்வு உள்ளவர்களாக இருக்கின்றோம்? பிறரது தொலைநோக்கினை நனவாக்கும் பொருட்டு நாம் எமது சொந்தத் தொலைநோக்கினை எவ்வாறு விட்டுக்கொடுக்கின்றோம்! அத்துடன் அம் முறைவழியில் எம்முள் எத்தனை ஆழமான அர்த்தத்தைக் கண்டறிகின்றோம்!



## 5. உசாத்துணையும் மேலதிக வாசிப்பும்


Berdal, M. & D. M. Malone (eds.) 2000. *Greed and Governance: Economic Agendas in Civil Wars,* Boulder, CO: Lynne Rienner.

Collier, P. & A. Hoeffler 1998. "On Economic Causes of Civil War," *Oxford Economic Papers,* Vol. 50, 563-573.

Duffield, M. 1994. "The Political Economy of Internal War: Asset Transfer, Complex Emergencies and International Aid," *in* Macrae and Zwi, op. cit., 50-69.

Elwert, G. 1999. "Markets of Violence" *Sociologus: A Journal for Empirical Ethno-Sociology and Ethno-Psychology,* Supplement 1, Berlin: Duncker & Humblot, 85 – 102.

Fairhead, J. 2000, "The Conflict over Natural and Environmental Resources," *in* Nafziger et al., op. cit., Vol. 1, 147-178.

Gaffney, P. 2000. "Burundi," *in* Nafziger et al., op. cit., Vol. 2, 132-138.

Gaigals, C. and M. Leonhardt 2001. *Conflict Sensitive Approaches to Development,* London: Saferworld, International Alert and the International Development Research Centre.

Gould, S. 2001. *The Guardian,* 27th September.

Holsti, K. 1996. *The State, War and the State of War,* Cambridge: Cambridge University Press.

International Alert 2000. *The Business of Peace,* London: International Alert and Prince of Wales Business Leaders Forum.

Jackson, T., M. Page & D. Lilly 2001. *Conflict Trends and Dynamics to 2015,* Draft Paper, London: International Alert.

Macrae, J. and A. Zwi (eds.) 1994. *War and Hunger: Rethinking International Responses to Complex Emergencies,* London: Zed Books.

Miall, H., O. Ramsbotham & T. Woodhouse 2000. *Contemporary Conflict Resolution*, London: Polity Press.

Morrison, C. 2000. "Stabilization Programmes, Social Costs, Violence and Humanitarian Emergencies," *in* Nafziger et al., op. cit., Vol. 1, 207-239.

Nafziger, E W., F. Stewart and R. Väyrynen (eds.) 2000. *War, Hunger, and Displacement: The Origins of Humanitarian Emergencies,* Oxford University Press, Vols 1 and 2.

National Criminal Intelligence Service (NCIS) 2000. *2000 Annual Report*, London: Her Majesty's Stationary Office.

Uvin, P. 1998. *Aiding Violence. The Development Enterprise in Rwanda West,* Hartford, Conn: Kumarian Press.

Väyrynen, R. 2000. "Weak States and Humanitarian Emergencies: Failure, Predation and Rent-Seeking," *in* Nafziger et al., op. cit., Vol. 2, 437-480.

Woodward, S. 1995. *Balkan Tragedy: Chaos and Dissolution after the Cold War,* Washington, DC: Brookings Institution.